# MCAS NEWS 2017-18

## முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரியில் ரத்த தான முகாம்

தினகரன் - 17/6/17

நாமகிரிப்பேட்டை, ஜூன் 17: நாமகிரிப்பேட்டை அருகேயுள்ள முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், இளைஞர் செஞ்சிலுவை சங்கம், செஞ்சுருள் சங்கம் மற்றும் ராசிபுரம் அரசு பொது மருத்துவமனை ஆகியவை சார்பில் ரத்த தான முகாம் நடந்தது. கல்லூரி தாளாளர் ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி ஆகியோர் தலைமை வகித்தனர். ராசிபுரம் அரசு மருத்துவர் ஸ்ரீதேவி, கல்லூரி முதல்வர் செல்வகுமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் தாளாளர் ராமசுவாமி பேசுகையில், ஒவ்வொரு மனித உடம்பிலும் 5 முதல் 6 லிட்டர் ரத்தம் இருக்கும். அதிலிருந்து வெறும் 300 முதல் 350 மில்லி லிட்டர் ரத்தம் மட்டுமே, ரத்த தானத்திற்கு எடுக்கப்படுகிறது. ரத்த தானம் அளிப்பதால், நமது உடலுக்கு எந்த பாதிப்பும் எற்படாது. நமது உடலில் புதிய ரத்தம் உற்பத்தியாகி, உடலுக்கு நன்மையாக அமையும், என்றார். இதில் 60க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்று ஆர்வமுடன் ரத்ததானம் செய்தனர். நிகழ்ச்சியில், புல முதன்மையர்கள் ஸ்டெல்லா பேபி, விஜயகுமார், ராமமூர்த்தி, செஞ்சிலுவை சங்கம் மற்றும் செஞ்சுருள் சங்க ஒருங்கிணைப்பாளர் செல்வமாலீஸ்வரன் மற்றும் அரசு மருத்துவமனை உழியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




▶ நாமகிரிப்பேட்டை அருகேயுள்ள முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரத்த தான முகாம் நடந்தது.

## இராசிபுரம் முத்தாயம்மாள் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்கம்

இராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு இளநிலை வகுப்புகள் தொடக்கவிழா துறைவாரியாக நடைபெற்றது. இதில் கல்லூரி தாளாளர் கே.பி. இராமசுவாமி, செயலாளர் திரு. முத்துவேல்ராமசுவாமி, செயல் இயக்குநர் திருமதி. மஞ்சு முத்துவேல், கல்லூரி முதல்வர் முனைவர்.இரா.செல்வகுமரன், புலமுதன்மையர்கள் முனைவர்.ஆ.ஸ்டெல்லாபேபி (நிர்வாகம்), முனைவர். எம்.என். பெரியசாமி(மாணவர் சேர்க்கை), முனைவர்.எஸ்.பி.விஜயகுமார் (கல்வி), முனைவர்.ஏ.பழனிசாமி (தேர்வுகள்) ஆகியோர் உரையாற்றினர்.

விழாவில் கல்லூரியின் செயலாளர் தமது சிறப்புரையில் இளநிலை படிப்பு பயிலும் முப்பது மாதங்கள்தான் வாழ்க்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் காலகட்டம் என்றார்.

முன்னதாக கல்லூரியின் முதல்வர் அவர்கள் தமது அறிமுக உரையில் சுதந்திர காலகட்டத்திற்கு பின்னும் மனப்பாட கல்விமுறை நடைமுறையில் இருந்தது. ஆனால் தற்போது அந்தநிலை மாறி செயல்முறைக் கல்வி நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாணவர்கள் பாடத்திட்டத்திற்கு அப்பாலும் சிந்திக்க வேண்டும். அதனை செயல்படுத்திக் கொண்டிருப்பது நமது கல்லூரி. எனவேதான் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய தர நிர்ணயக்குழுவால் வெளியிடப்பட்ட தரவரிசைப் பட்டியலில், தேசிய அளவில் 88—வது இடமும், தமிழக அளவில் சுயநிதிக் கல்லூரிகளின் மத்தியில் 6—வது இடமும் பெற முடிந்தது என்றார்.


முன்னதாக முதலாமாண்டு மாணவ, மாணவிகளை வரவேற்கும் வகையில் மூத்த மாணவ, மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதலாமாண்டு மாணவ,மாணவியர் ஒவ்வொருவருக்கும் கல்லூரியின் உயிர் வேதியியல் துறையின் சார்பில் மொத்தம் 2,000 விதைப் பந்துகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் அனைத்துத் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், முதலாமாண்டு மாணவ,மாணவியர்கள் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்கள் ஆகியோர் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

Maduraimani-30.6.2017

ர் கள் வழங்குவதற்கான அளவீடு தைகள், பெற்றோர் பங்கேற்றனர்.

தினமணி - 4/7/17

# முத்தாயம்மாள் கலை கல்லூரியில் வகுப்புகள் தொடக்கம்




**ராசிபுரம்,ஜூலை 3:** ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நிகழ் கல்வியாண்டின் முதலாமாண்டு இளநிலை வகுப்புகள் தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது **(படம்).**

இதில் கல்லூரி தாளாளர் கே.பி. ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, செயல் இயக்குநர் மஞ்சுமுத்துவேல், கல்லூரி முதல்வர் முனைவர்.இரா.செல்வகுமரன், புல முதன்மையர்கள் எஸ். டெல்லாபேபி (நிர்வாகம்), முனைவர்.எம்.என்.பெரியசாமி (மாணவர் சேர்க்கை), எஸ்.பி.விஜயகுமார் (கல்வி), ஏ.பழனிசாமி (தேர்வுகள்) ஆகியோர் பேசினர்.

முன்னதாக முதலாமாண்டு மாணவ,மாணவிகளை வரவேற்கும் வகையில் மூத்த மாணவ, மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. முதலாமாண்டு மாணவ,மாணவியர் ஒவ்வொருவருக்கும் கல்லூரியின் உயிர்வேதியியல் துறையின் சார்பில் மொத்தம் 2 ஆயிரம் விதைகள் வழங்கப்பட்டன. விழாவில் கல்லூரி ஆசிரியர்கள், பெற்றோர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தினமலர் சேலம், ஜூலை 5 2017




ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் துவக்க விழாவை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

# முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் துவக்க விழா

ராசிபுரம், ஜூலை 5-

ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு இளநிலை வகுப்புகள் துவக்க விழா நடைபெற்றது.

விழாவிற்கு தாளாளர் ராமசுவாமி தலைமைவகித்தார். செயலர் முத்துவேல், செயல் இயக்குனர் மஞ்சு, கல்லூரி முதல்வர் செல்வகுமரன், டீன்கள் ஸ்டெல்லா பேபி (நிர்வாகம்), பெரியசாமி (மாணவர் சேர்க்கை), விஜயக்குமார் (கல்வி), பழனிசாமி (தேர்வுகள்) ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாவில் செயலர் முத்துவேல் பேசுகையில் இளநிலை படிப்பு பயிலும் 30 மாதங்கள் தான் வாழ்க்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் காலகட்டம் என்றார்.

கல்லூரி முதல்வர் செல்வகுமரன் பேசுகையில் முன்பு மனப்பாட கல்வி முறை நடைமுறையில் இருந்தது. ஆனால் தற்போது இந்த நிலை மாறி செயல் முறை கல்வி நடைமுறை படுத்தப்படுகிறது. மாணவர்கள் பாடத்திட்டத்திற்கு அப்பாலும் சிந்திக்க வேண்டும். அதனை முத்தாயம்மாள் கலைக்கல்லூரி செயல்படுத்தி வருகிறது.

எனவே தான் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய தர நிர்ணய குழுவால் வெளியிடப்பட்ட தர வரிசை பட்டியலில் தேசிய அளவில் 86 வது இடமும், தமிழக அளவில் சுயநிதி கல்லூரிகளின் மத்தியில் 6வது இடமும் பெற முடிந்தது என்றார்.

முன்னதாக முதலாமாண்டு மாணவர்களை வரவேற்கும் வகையில் மூத்த மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முதலாமாண்டு மாணவ, மாணவியருக்கு கல்லூரியின் உயிர்வேதியியல் துறை சார்பில் 2ஆயிரம் விதைபந்துகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் அனைத்து துறைத்தலைவர்கள் பேராசிரியர்கள், பெற்றோர்கள் மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர்.

துணைத் தலைவர் விஜயன் நன்றி கூறினார்.




தினத்தந்தி – 06.07.17.

### முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியில்

# முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடக்க விழா

ராசிபுரம், ஜூலை.6–

ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு இளநிலை வகுப்புகள் தொடக்க விழா நடந்தது. விழாவிற்கு கல்லூரியின் தாளாளர் கே.பி.ராமசுவாமி தலைமை தாங்கினார். செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, செயல் இயக்குனர் மஞ்சு ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் முதல்வர் செல்வகுமரன், டீன்கள் ஸ்டெல்லா பேபி(நிர்வாகம்), பெரியசாமி (மாணவர் சேர்க்கை), விஜயகுமார் (கல்வி), பழனிசாமி (தேர்வுகள்) ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவில் கல்லூரியின் செயலாளர் முத்துவேல் ராமசுவாமி பேசும் போது இளநிலை படிப்பு பயிலும் 30 மாதங்கள் தான் வாழ்க்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் என்றார். விழாவில் கல்லூரி முதல்வர் செல்வகுமரன் பேசும் போது, 'முன்பு மனப்பாட கல்வி முறை இருந்தது. தற்போது இந்த நிலை மாறி செயல்முறை கல்வி நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாணவர்கள் பாடத்திட்டத்திற்கு அப்பாலும் சிந்திக்க வேண்டும். மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய தர நிர்ணய குழுவால் வெளியிடப்பட்ட தர வரிசைப் பட்டியலில் முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரி தேசிய அளவில் 86–வது இடமும், தமிழக அளவில் சுயநிதி கல்லூரிகளின் மத்தியில் 6–வது இடமும் பெற்றுள்ளது' என்றார். விழாவில் முதலாம் ஆண்டு மாணவ–மாணவிகளுக்கு கல்லூரியின் உயிர் வேதியியல் துறை சார்பில் 2 ஆயிரம் விதை பந்துகள் வழங்கப்பட்டன. விழாவில் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. விழாவில் அனைத்து துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல்லில்

# முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழா




▸ நாமகிரிப்பேட்டை முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு இளநிலை வகுப்புகள் தொடக்க விழா நடந்தது. இதில் தாளாளர் ராமசுவாமி பேசினார்.

நாமகிரிப்பேட்டை, ஜூலை 2: நாமகிரிப்பேட்டை முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு இளநிலை வகுப்புகள் தொடக்க விழா நடந்தது. தாளாளர் ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, செயல் இயக்குநர் மஞ்சு முத்துவேல் ஆகியோர் தலைமை வகித்தனர். முதல்வர் செல்வகுமரன், புல முதன்மையர்கள் ஸ்டெல்லா பேபி, பெரியசாமி, விஜயகுமார், பழனிசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்

விழாவில் தாளாளர் ராமசுவாமி பேசுகையில், இளநிலை படிப்பு பயிலும் 30 மாதங்கள் தான் வாழ்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் காலகட்டம். மாணவர்கள் பாடத்திட்டத்திற்கு அப்பாலும் சிந்திக்க வேண்டும். அப்போது தான் எதிர்காலத்தில் சிறப்பான முறையில் செயல்பட முடியும். மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தர நிர்ணய குழுவால் வெளியிடப்பட்ட தரவரிசைப் பட்டியலில், முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரி தேசிய அளவில் 86வது இடமும், தமிழக அளவில் சுயநிதி கல்லூரிகளின் மத்தியில் 6வது இடமும் பெற்றுள்ளது, என்றார்

முன்னதாக முதலாமாண்டு மாணவ, மாணவிகளை வரவேற்கும் வகையில், மூத்த மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. முதலாமாண்டு மாணவ, மாணவியர் அனைவருக்கும் கல்லூரியின் உயிர்வேதியியல் துறை சார்பில் விதைப் பந்துகள் வழங்கப்பட்டன. இதில் அனைத்து துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ராசிபுரம் அரசு கல்லூரியில் கருத்தரங்கு

ராசிபுரம், ஜூலை 2: ராசிபுரம் திருவள்ளுவர் அரசு கலை கல்லூரியின் ... நடந்தது. முதல்வர் (பொ) சுகுணா தலைமை வகித் ... கோட்டுவேல் சிறப்புரையாற்றினார். போதை ...

ஓடையை ஒட்டி தமீலா செய்ததாக விசாரணையில் கொலை செய்யப்பட்டு கூறியுள்ளார்.

போனது. மொத்த வர்த்தகம் ரூ.68.77 லட்சத்திற்கு நடைபெற்றது.

தி இந்து - 7/7/17

# கலை கல்லூரிகளில் மாணவர்களை பெரிதும் கவர்ந்த பி.காம், பிபிஏ படிப்புகள்

● பி.ஏ. ஆங்கில இலக்கிய படிப்புக்கு மாணவிகளிடம் வரவேற்பு

ஜெ.கு.லிஸ்பன் குமார்

சென்னை

இந்த ஆண்டு கலை அறிவியல் கல்லூரிகளில் பிகாம், பிபிஏ படிப்புகள் மாணவர்களை பெரிதும் கவர்ந்திருக்கிறது. அதேநேரத்தில் மாணவிகள் மத்தியில் பிஏ ஆங்கில இலக்கிய படிப்புக்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே பொறியியல் படிப்பு மீதான மோகம் மாணவ-மாணவிகள் மத்தியில் குறைந்து அவர்களின் பார்வை கலை அறிவியல் படிப்புகள் பக்கம் திரும்ப ஆரம்பித்திருக்கிறது.

இதுபற்றி கல்லூரி கல்வி இயக்குநர் பேராசிரியை ஜெ.மஞ்சுளா கூறுகையில், "தற்போது, கலை அறிவியல் படிப்புகளில் சேரும் ஆர்வம் மாணவர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. இந்த ஆண்டு பி.காம் படிப்பில் சேர அதிக விண்ணப்பங்கள் வந்தன. அதற்கு அடுத்தபடியாக பிஏ (ஆங்கில இலக்கியம்), பிபிஏ, பிஎஸ்சி கணிதம், இயற்பியல், வேதியியல் போன்ற படிப்புகள் அதிகளவில் மாணவர்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளன. குறிப்பிட்ட படிப்பில் சேர அதிக எண்ணிக்கையிலான விண்ணப்பங்கள் வரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகத்தின் அனுமதி பெற்று இடங்களை கல்லூரிகள் அதிகரித்துக் கொள்ளலாம். அந்த வகையில், பல கல்லூரிகளில் இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன" என்றார்.

சென்னை மாநில கல்லூரி முதல்வர் பேராசிரியர் பிரம்மானந்த பெருமாள் கூறும்போது, "எங்கள் கல்லூரியில் பி.காம். படிப்பில் பி.காம். (பொது), பி.காம் (கார்ப்பரேட் செக்ரட்டரிஷிப்) என இரண்டு வகையான படிப்புகள் உள்ளன. இந்த பி.காம். படிப்புகளும் உடனடியாக நிரம்பிவிட்டன. அதேபோல், பிஎஸ்சி படிப்புகளுக்கும் பெரிதும் டிமாண்ட் இருந்தது" என்றார்.

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை முன்னாள் இணை இயக்குநரும், கல்வி ஆலோசகருமான நடராஜன் கூறுகையில், "தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் பொறியியல் கல்லூரிகளில் மட்டுமல்லாமல் கலை அறிவியல் கல்லூரிகளிலும் கேம்பஸ் இண்டர்வியூ வைத்து வேலைக்கு மாணவர்களை தேர்வுசெய்கிறார்கள். பல ஐ.டி. நிறுவனங்கள், நிதிச்சேவைகள், தகவல் பாதுகாப்பு பிரிவுகளுக்கு பி.காம், பிபிஏ படித்தவர்களை தேர்வுசெய்து அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்து பணியமர்த்திக் கொள்கின்றன. கணக்கு துறையில் தொழில்ரீதியாக வளர விரும்புவோர் தங்களுக்கான அடிப்படை தகுதியாக பி.காம், பிபிஏ படிப்புகளை பார்ப்பதால் அந்த படிப்புகள் அதிகம் தேர்வு செய்யப்படுகின்றன" என்று தெரிவித்தார்.

கல்வி ஆலோசகர் நெடுஞ்செழியனிடம் கேட்டபோது, "பொறியியல் படித்துவிட்டு வேலையில்லாமல் இருப்பவர்களையும் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளையும் மாணவர்களும், பெற்றோரும் நேரடியாகவே பார்க்கிறார்கள். இதன் காரணமாக, தானாகவே அவர்களின் பார்வை கலை அறிவியல் படிப்புகள் பக்கம் திரும்பியுள்ளது" என்று குறிப்பிட்டார்.

---

தெரிவித்தனர்.

ளிட்ட அனைத்து வச கொண்டனர்.

தினகரன் - 8/7/17

## முத்தாயம்மாள் கல்லூரியில்

# நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்

**நாமகிரிப்பேட்டை, ஜூலை 8:** நாமகிரிப்பேட்டை அருகேயுள்ள முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் குடிமக்கள் நுகர்வோர் மன்றம் சார்பில், நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புனர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக நாமக்கல் மாவட்ட தொழிலாளர் ஆய்வாளர் மஞ்சள்நாதன் கலந்து கொண்டு பேசுகையில்,




▶ முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. இதில், மாவட்ட தொழிலாளர் நல ஆய்வாளர் மஞ்சள்நாதன் பேசினார்.

நுகர்வோர்கள் தாங்கள் வாங்கும் பொருட்களின் தரம், எடை அளவு போன்றவற்றில் குறைபாடு காணப்பட்டால், தமிழக அரசு நுகர்வோர் பாதுகாப்புத்துறைக்கு மனு அனுப்பலாம். இதனை தற்போது நுகர்வோர்கள் வாட்ஸ் ஆப் மூலமகவும் தெரியப்படுத்தலாம் என்றார். இந்நிகழ்ச்சிக்கு நாமக்கல் மாவட்ட தொழிலாளர் துணை ஆய்வாளர்கள் சங்கர், சுதா, கல்லூரியின் முதல்வர் செல்வகுமரன், குடிமக்கள் நுகர்வோர் மன்றத்தின் தலைவர் விஜயரங்கன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு விளக்கமளித்தனர்.

விழாவில் மொத்தம் ₹32 சஞ்சய் நன்றி கூறினார்.

தினகரன் - 18/7/17

# முத்தாயம்மாள் கல்லூரியில் சாலை விழிப்புணர்வு விழா

நாமகிரிப்பேட்டை, ஜூலை 18: நாமகிரிப்பேட்டை அருகேயுள்ள முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சாலை விழிப்புணர்வு விழா நடைபெற்றது.

இவ்விழாவிற்கு ராசிபுரம் போக்குவரத்து போலீஸ் இன்ஸ்பெக்டர் சுப்ரமணி கலந்து கொண்டு சாலை விதிகளைப்பற்றி பேசியதாவது:

பெற்றோர்கள் தாங்கள் குழந்தைகளை குறிப்பிட்ட வயதுக்கு பின்னரே, வண்டி ஓட்ட அனுமதிக்க வேண்டும். இருசக்கர வாகனம் ஓட்டுபவர்கள் கட்டாயம் தலைகவசம் அணிய வேண்டும், இரு வழி மற்றும் நான்கு வழிச் சாலைகளில் எவ்வாறு வண்டி ஓட்ட வேண்டும் என விளக்கமாக பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் செல்வகுமரன், செஞ்சிலுவை மற்றும் செஞ்சுருள் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் ராமமூர்த்தி, செல்வமாலீஸ்வரன் மற்றும் மாணவ, மாணவிகள், மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.

தார்.

பன் ஆகியோர் அடங்கிய பில் உயர் நீதிமன்றத்தில் னர்.

தினகரன் - 26/7/17

### பள்ளி, கல்லூரி, அலுவலகங்களில்

# வந்தே மாதரம் பாடல் பாடுவது கட்டாயம்

## அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, ஜூலை 26:** பள்ளி, கல்லூரிகள், கல்வி நிறுவனங்களில் வாரம் ஒரு முறை வந்தே மாதரம் பாடலை ஒலிபரப்பி பாட வேண்டும் என்று தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அரசு அலுவலகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் மாதம் ஒரு முறை வந்தே மாதரம் பாடலை ஒலிபரப்பி பாட வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரசு உயர் நிலை பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப கடந்த 2013ம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் எழுத்து தேர்வு நடத்தியது. இத்தேர்வில் 107வது கேள்வியாக வந்தே மாதரம் பாடல் முதலில் எந்த மொழியில் இயற்றப்பட்டது என்ற கேள்வி கேட்கப்பட்டிருந்தது. அதற்கு வங்க மொழி, உருது, மராத்தி, சமஸ்கிருதம் என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டு, சரியானதை தேர்வு செய்க என்று கூறப்பட்டது.

இதற்கு வங்கமொழி என பதிலளித்த வீரமணி என்ற விண்ணப்பதாரர், பாட புத்தகத்தில் வங்கமொழி என்றே கூறப்பட்டுள்ளதால், அந்த விடையை எழுதிய தனக்கு ஒரு மதிப்பெண்கள் வழங்கவும், ஒரு ஆசிரியர் பணியிடத்தை தனக்கு நிறுத்தி வைக்கவும் கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி எம்.வி.முரளிதரன் முன் வத்தே மாதரம் பாடல் எந்த மொழியில் முதலில் எழுதப்பட்டது என கேட்டு தெரிவிக்க உத்தரவிட்டிருந்தார். இதையடுத்து, வந்தே மாதரம் வங்க மொழியில் எழுதப்பட்ட சமஸ்கிருத பாடல் என விளக்கம் அரசு தரப்பில் விளக்கம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, இந்த வழக்கில் நீதிபதி நேற்று தீர்ப்பளித்தார். தீர்ப்பில் கூறியிருப்பதாவது:

வந்தே மாதரம் வங்க மொழியில் எழுதப்பட்டு சமஸ்கிருதத்தில் பாடப்படுகிறது என்று தெரியவருகிறது. எனவே மனுதாரர் வீரமணிக்கு ஒரு மதிப்பெண் வழங்கி, அவருக்கு 4 வாரத்தில் பணி நியமன ஆணையை ஆசிரியர் தகுதி தேர்வு வாரியம் வழங்க வேண்டும். வந்தே மாதரம் பாட லின் மகத்துவத்தை தெரிவிக்க வும், வரும் இளம் தலைமுறை யினரிடையே நாட்டுப்பற்றை வளர்க்கவும் இந்த நீதிமன்றம் சில உத்தரவுகளைப் பிறப்பிக்கிறது.

* அனைத்து பள்ளிகளிலும் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்க ளிலும், மற்ற கல்வி நிறுவனங்களிலும் வாரம் ஒரு முறை வந்தே மாதரம் பாடலை திங்கள் அல்லது வெள் ளிக்கிழமை ஒலிபரப்பி பாட வேண் டும். அரசு அலுவலகம், தனியார் அலுவலகங்கள், தொழிற்சாலைக ளில் மாதம் ஒரு முறை கட்டாயமாக வந்த மாதரம் பாடலை ஒலிபரப் பாட வேண்டும்.

* அரசு இணையதளம் மற்றும் சமூக வலைத்தங்களில் வந்தேமாத ரம் பாடல் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிட வேண்டும். இது குறித்து தமிழக தலைமைச் செய லாளர் சம்மந்தப்பட்ட அதிகாரிக ளுக்கு உரிய உத்தரவை பிறப்பிக்க வேண்டும்.

*இந்த பாடலை பாட சிரமப் டும் நபர்கள் மற்றும் நிறுவனங்க உரிய காரணங்கள் தெரிவித்தா அவர்களை கட்டாயப்படுத்தக் டாது. இவ்வாறு உத்தரவில் கூற பட்டுள்ளது.

பாரூர் மற்றும் பண்ணந்தூர் பள்ளிகளின் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

தினமலர் - 29/7/17




ராசிபுரம் முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியில் அப்துல்கலாம் உருவச்சிலையை கல்லூரி செயலாளர் முத்துவேல் ராமசுவாமி திறந்து வைத்தார். அருகில் கல்லூரி முதல்வர் செல்வகுமரன்.

# முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரியில் அப்துல்கலாம் சிலை திறப்பு விழா

ராசிபுரம், ஜூலை 29-

முன்னாள் குடியரசுத் தலைவரும் அறிவியல் விஞ்ஞானியுமானடாக்டர். ஏ.பி.ஜெ.அப்துல்கலாமின் இரண்டாமாண்டு நினைவு தினத்தையொட்டி ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் அவரது உருவச்சிலை திறந்துவைக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலாளர் முத்துவேல் ராமசுவாமி கலந்துகொண்டு சிலையை திறந்து வைத்து மலர்மாலை அணிவித்தார். கல்லூரி முதல்வர் செல்வகுமரன், கல்லூரி டீன்கள் ஸ்டெல்லாபேபி(நிர்வாகம்), விஜியகுமார் (கல்வி), பழனிசாமி (தேர்வுகள்), பெரியசாமி (சேர்க்கை) ஆகியோரும், அனைத்துத் துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும் சிலையை நிறுவ ஏற்பாடு செய்த வேதியியல் துறையின் மூன்றாமாண்டு மாணவ, மாணவியர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

உள்புறதாழ்ப்பாளை ... டிவ
இரும்பு ராடால் திறந்து பறித்துக்கொண்டு மர்ம

தினகரன் - 29/7/17

# முத்தாயம்மாள் கல்லூரியில் அப்துல்கலாம் சிலை திறப்பு




▶ நாமகிரிப்பேட்டை முத்தாயம்மாள் கல்லூரியில், மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் உருவச்சிலை திறக்கப்பட்டது.

நாமகிரிப்பேட்டை, ஜூலை 29: முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாமின், 2வது ஆண்டு நினைவு தினத்தையொட்டி, நாமகிரிப்பேட்டை அருகேயுள்ள முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியியல் கல்லூரியில் அப்துல் கலாமின் உருவச்சிலை திறக்கப்பட்டது.

கல்லூரியின் செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, சிலையை திறந்து வைத்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். முன்னதாக கல்லூரியின் பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் செல்வகுமரன், புல முதன்மையர்கள் ஸ்டெல்லா பேபி, விஜியகுமார், பழனிசாமி, பெரியசாமி உள்ளிட்டோரும், துறைத்தலைவர்கள், மற்றும் பேராசியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தூவினர்.

தினமணி - 3/8/17

# முத்தாயம்மாள் கல்லூரியில் சுற்றுச்சூழல் இயக்கக் கூட்டம்

ராசிபுரம், ஆக. 2: ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், சுற்றுச் சூழல் இயக்கத்தில் உறுப்பினர்களாக இணைந்துள்ள மாணவர்களுக்கான நோக்கு நிலைக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

கல்லூரியின் சுற்றுச் சூழல் இயக்க ஒருங்கிணைப்பாளர் ஜி.எஸ்.பிரபின் வரவேற்றார்.

முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் ஆர்.செல்வகுமரன் கலந்துகொண்டு சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதில் மாணவர்களின் பங்கு குறித்து சிறப்புரை ஆற்றினார். கல்லூரியின் சமுதாய மேம்பாட்டுச் செயல்களுக்கான தலைவர் எம்.ராமமூர்த்தி மாணவர்களுக்கு சுற்றுச் சூழல் மேம்பாட்டுக்கான சிறந்த ஆலோசனைகளை வழங்கினார். சுற்றுச் சூழல் இயக்க துணை ஒருங்கிணைப்பாளர் பி.சோபனாதேவி உள்ளிட்டோர் பங்கேற்றுப் பேசினர். நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு விதைப் பந்துகள் வழங்கப்பட்டன.

ஏவுகணை மற்றும் அதன் | பயிற்சி மையங்களை பயன்ப | கொண்டனர். | அப்போதைய

தினத்தந்தி - 9/8/17

# ராக்கிங்கில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை

## கலை அறிவியல் கல்லூரி முதல்வர்களுக்கு இயக்குனரகம் கடிதம்

சென்னை, ஆக.9–

ராக்கிங்கில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர்களுக்கு கல்லூரி கல்வி இயக்குனரகம் கடிதம் அனுப்பி உள்ளது.

### ராக்கிங்

தமிழகத்தில் கலைக்கல்லூரிகள், பி.எட். கல்லூரிகள், உடற்பயிற்சி கல்லூரிகள் உள்பட மொத்தம் 1480 கல்லூரிகள் உள்ளன. இவற்றில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள், சுயநிதி கல்லூரிகள் ஆகியவை உண்டு. இந்த கல்லூரிகளில் இளநிலை, முதுநிலை, ஆராய்ச்சி படிப்புகள், கல்வியியல் (பி.எட்.) ஆகிய படிப்புகளில் 12 லட்சத்து 60 ஆயிரம் பேர் படிக்கிறார்கள். இவர்களில் முதலாம் ஆண்டு இளநிலையில் மட்டும் 3 லட்சத்து 9 ஆயிரம் பேர் சேர்ந்துள்ளனர்.

கல்லூரிகளை பொறுத்தவரை இந்த வருடம் சேர்ந்த மாணவ–மாணவிகளை 2–வது ஆண்டு படிப்பவர்கள் அல்லது சீனியர்கள் ராக்கிங் செய்ய வாய்ப்பு உண்டு. அதாவது ஜூனியர் மாணவர்களை அழைத்து அவர்களை கேலி செய்தல், தன்னுடைய எழுத்துவேலைகளை அவர்களை கொண்டு செய்தல், கட்டாயப்படுத்தி சிகரெட் பிடிக்க வைத்தல், கட்டாயப்படுத்தி பாட்டுப்பாடுதல் உள்ளிட்ட ராக்கிங்கில் ஈடுபடுவது உண்டு.

ராக்கிங்குக்கு பயந்து படிப்பை பாதியில் விடுவதும் உண்டு. மேலும் தற்கொலை செய்வதும் உண்டு. எனவே ராக்கிங்கில் ஈடுபடக்கூடாது என்று மத்திய அரசு, மாநில அரசுகளுக்கு கடிதம் அனுப்பி உள்ளது.

### கடிதம்

இதையொட்டி தமிழக கல்லூரிகள் கல்வி இயக்குனரகம் அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கும் ராக்கிங் தொடர்பாக ஒரு கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளது.

இந்த கடிதம் குறித்து இயக்குனரக அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

ராக்கிங் எந்த கல்லூரியிலும் நடக்கக்கூடாது. ராக்கிங்கை தடுக்க ஒரு பேராசிரியை தலைமையில் கமிட்டியை முதல்வர் அமைக்க வேண்டும். கல்லூரியில் எல்லாரும் தெரியும் வண்ணம் முதல்வர் அறை அருகே ராக்கிங் தொடர்பாக புகார் தெரிவிக்க கருப்பு புகார் பெட்டி வைக்கவேண்டும். அந்த பெட்டியை முதல்வர் தினமும் திறந்து பார்க்கவேண்டும். ராக்கிங்கில் யாராவது ஈடுபட்டால் அவர் யாராக இருந்தாலும் சஸ்பெண்டு செய்யப்பட வேண்டும். விடுதியில் ராக்கிங் நடக்காமல் இருக்க நன்றாக கண்காணிக்க வேண்டும். விடுதியில் தான் ராக்கிங் நடக்க வாய்ப்பு அதிகம். விடுதி வார்டன் தலைமையில் ஒரு ராக்கிங் தடுப்பு குழு அமைக்க வேண்டும்.

### 2 வருடம் சிறை

ராக்கிங்கில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதிகபட்சமாக 2 வருடம் சிறைத்தண்டனை உறுதி. ராக்கிங்கில் ஈடுபட்டால் அவரை எந்த கல்லூரியிலும் சேர்க்க முடியாது. சேர்க்க முடியாதபடிக்கு சான்றிதழ் கொடுக்கப்படும்.

எனவே ராக்கிங்கில் யாரும் ஈடுபட்டு படிப்பை கெடுத்துக் கொள்ள வேண்டாம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.


மணப்பந்தல் தொடர்ச்சி...

மணமகள் தேவை... மணமகள் தேவை...

நாடார்

CSIநாடார் வ26, உயரம்-5.10 புதுநிறம் படிப்பு B.E., 75,000 PM, House Rent 70,000 Chennai ct: 7397260116

இந்து நாடார் 40 (Divorcee) M.Com சொந்ததொழில் Deg படித்த பெண் தேவை. (Divorcee Accepted). 9841112037.

இந்துநாடார் 31/ரேவதி, மீனம், சிகப்பு, BSc, MBA, CTS(SME) 30,000pm. Mother- இல்லத்து பிள்ளைமார். 97910 67693

நாயுடு

Balija Naidu 38/171,Rohini MBA MNC Chennai 8L PA. Unmarried.Seeks Educated Girl & Good Family. Any Naidu. 7397243646, varadharajulu.ad@gmail.com

நாயுடு,28/175, MBBS, MD(GM) Doctor, KMC.Hosp, Chennai,

போயர்

32, B.E., 50,000 போயர் மணமகனுக்கு மணமகள் தேவை. ஜாதி தடையில்லை. Contact: 8438131645

தேவர்

இந்து தேவர், அகமுடையார் வயது 42 சுயதொழில் மாத வருமானம் ரூ.40,000/– படிப்பு B.Sc மணமகள் தேவை Ct: 8903267568

வண்ணார்

பிருத்விகுமார், B.Com வயது29 அவிட்டம், கும்பம், தலைமை செயலகம் 30,000/- இருப்பிடம் சென்னை. Ct: 99411 94752.

வன்னியர்

வன்னியர் 29/5.7 B.Com MBA Pvt com Asst manager 50,000 pm, Good Family @ Chennai Ct: 7299960446

வழங்கப்பட்டன. விழிப்புணர்வு வழிகாட்டி துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன.

தினமணி - 10-8-17

# முத்தாயம்மாள் கல்லூரியில் வகுப்புகள் தொடக்கம்

**ராசிபுரம், ஆக. 9:** ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு முதுநிலை வகுப்புகள் தொடக்கவிழா அண்மையில் நடைபெற்றது.

முன்னதாக முதலாமாண்டு மாணவ,மாணவியரை வரவேற்கும் வகையில் மூத்த மாணவ, மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. கல்லூரி தாளாளர் கே.பி. ராமசுவாமி, செயலாளர் முத்துவேல்ராமசுவாமி, செயல் இயக்குநர் மஞ்சுமுத்துவேல், கல்லூரி முதல்வர் முனைவர்.இரா.செல்வகுமரன், புல முதன்மையர்கள், ஆ.ஸ்டெல்லாபேபி (நிர்வாகம்), எம்.என். பெரியசாமி (மாணவர் சேர்க்கை), எஸ்.பி.விஜயகுமார் (கல்வி), ஏ.பழனிசாமி (தேர்வுகள்) ஆகியோர் அறிமுக உரையாற்றினர். விழாவில் கல்லூரியின் செயலாளர் முத்துவேல்ராமசாமி பேசினார்.

உயரம் கொண்ட 'விபூ | பெண்ணை மீட்டு சிகிச் | பரப்பை ஏற்படுத்தியது.




### ராசிபுரம் முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரியில்

# முதலாம் ஆண்டு முதுநிலை வகுப்புகள் தொடக்க விழா

ராசிபுரம், ஆக.11–

ராசிபுரம் முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு முதுநிலை வகுப்புகள் தொடக்க விழா நடந்தது. விழாவில் முதலாமாண்டு மாணவ–மாணவிகளை வரவேற்கும் வகையில் மூத்த மாணவ–மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. மூத்த மாணவர்கள் தங்கள் அனுபவங்களை மேடையில் பகிர்ந்து கொண்டனர். கல்லூரி தாளாளர் கே.பி.ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, செயல் இயக்குனர் மஞ்சுமுத்துவேல், கல்லூரி முதல்வர் செல்வகுமரன், புல முதன்மையர்கள் ஸ்டெல்லா பேபி (நிர்வாகம்), பெரியசாமி (மாணவர் சேர்க்கை), விஜயகுமார் (கல்வி), பழனிசாமி (தேர்வுகள்) ஆகியோர் அறிமுக உரையாற்றினார்கள்.

விழாவில் கல்லூரி செயலாளர் பேசுகையில், முதுநிலை படிப்பு பயிலும் காலக்கட்டத்தில் மாணவ–மாணவிகள் ஆங்கில அறிவை பெருக்கிக் கொள்ள வேண்டும். தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். முதல்வர் பேசுகையில், மாணவர்கள் சவால்களை வாய்ப்புகளாக மாற்றிக்கொள்ள வேண்டும். மாணவர்கள் பாடத்திட்டத்திற்கு அப்பாலும் சிந்திக்க வேண்டும். நமது கல்லூரி தேசிய தர நிர்ணயக்குழு வெளியிட்டுள்ள தர வரிசைப்பட்டியலில் தேசிய அளவில் 86–வது இடத்தையும், தமிழகத்தில் சுயநிதிக்கல்லூரிகளின் மத்தியில் 6–வது இடத்தையும் பிடித்து சாதனை படைத்துள்ளது என்று கூறினார். விழாவில் கல்லூரியின் அனைத்து துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், முதலாமாண்டு மாணவ–மாணவிகள், நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மண்டலத்தில்

# முட்டை விலை 5 காசுகள் உயர்வு

**370 காசுகளாக நிர்ணயம்**

நாமக்கல், ஆக.11–

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 365 காசுகளாக இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 5 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 370 காசுகளாக உயர்ந்து உள்ளது.

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–372, ஐதராபாத்–335, விஜயவாடா, தனுகு–340, பார்வாலா–334, மும்பை–375, மைசூரு–365, பெங்களூரு–365, கொல்கத்தா–389, டெல்லி–347. கறிக்கோழி கிலோ ரூ.77–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் அதன் விலையை கிலோவுக்கு ரூ.7 குறைக்க முடிவு செய்தனர். அதன்படி கறிக்கோழி விலை கிலோ ரூ.70 ஆக சரிவடைந்து உள்ளது. முட்டைக்கோழி கிலோ ரூ.76–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

தினகரன் - 12-8-17

முத்தாயம்மாள் கல்லூரியில்

# முதுநிலை முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழா




நாமகிரிப்பேட்டை முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் முதுநிலை முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழா நடந்தது.

நாமகிரிப்பேட்டை, ஆக. 12: நாமகிரிப்பேட்டை முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், முதலாமாண்டு வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது.

விழாவில் கல்லூரியின் தாளாளர் ராமசுவாமி கலந்துகொண்டு பேசியதாவது:

முதுநிலை படிப்பு பயிலும் கால கட்டத்தில் ஆங்கில அறிவு, தனித்திறமைகளை மாணவர்கள் வளர்த்துக் கொள்வதுடன், சவால்களை வாய்ப்புகளாக மாற்றிக் கொள்ள வேண்டும். மாணவர்கள் பாடத்தையும் தாண்டி சிந்திக்க வேண்டும். அதனை செயல்படுத்தி கொண்டிருப்பது நமது கல்லூரி. எனவே தான் மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய தர நிர்ணயக் குழுவால் வெளியிடப்பட்ட தரவரிசைப் பட்டியலில், தேசிய அளவில் 80வது இடமும், தமிழக அளவில் 6வது இடமும் பெற முடிந்தது என்றார்.

நிகழ்ச்சியில் முதலாமாண்டு மாணவ, மாணவிகளை வரவேற்கும் வகையில் சீனியர் மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரியின் செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, செயல் இயக்குனர் மஞ்சு முத்துவேல், முதல்வர் செல்வகுமரன், புல முதன்மையர்கள் ஸ்டெல்லா பேபி, பெரியசாமி, விஜயகுமார், பழனிசாமி மற்றும் அனைத்து துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், முதலாமாண்டு மாணவ, மாணவியர்கள், நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.


ARRS மல்டிபிளக்ஸ் A/C dts & BC கைலாஷ் A/C dts | சேலம் - ARRS மல்டிபிளக்ஸ்


மாவட்டம் தினகரன் - 16.08.20

முத்தாயம்மாள் கல்லூரியில்

# இலவச கண் பரிசோதனை முகாம்



நாமகிரிப்பேட்டை முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியில் இலவச கண்சிகிச்சை முகாம் நடந்தது.

நாமகிரிப்பேட்டை, ஆக.16: நாமகிரிப்பேட்டை அடுத்த முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்கம் மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில், இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. முகாமை கல்லூரி தாளாளர் ராமசுவாமி தொடங்கி வைத்தார்.

மதுரை அரவிந்த் கண் மருத்துவர்கள் கமலக்கண்ணன், நிஹால் அஹமத், மக்கள் தொடர்பு அலுவலர் ஜெயராம், கல்லூரி முதல்வர் செல்வகுமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள், பெற்றோர்கள், குழந்தைகள், கல்லூரி வாகன ஓட்டுனர்கள் என 500க்கும் மேற்பட்டவர்களுக்கு இலவச கண் பரிசோதனை செய்யப்பட்டது. இந்த முகாமில் 65 பேருக்கு குறைந்த விலையில் கண் கண்ணாடி வழங்கப்பட்டது. மேலும் இலவசமாக கண் சொட்டு மருந்து, 6 ஆசிரியர்களுக்கு இலவசமாக கண் கண்ணாடி வழங்கப்பட்டது. முகாமில் புல முதன்மையர்கள் ஸ்டெல்லா பேபி, பழனிசாமி, பெரியசாமி, விஜயகுமார், ராமமூர்த்தி, துறைத்தலைவர்கள் செல்வமாலீஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாதவன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமணி - 17/8/17

# முத்தாயம்மாள் கல்லூரியில் சுயஉதவிப் பொருள்கள் கண்காட்சி



கண்காட்சியைப் பார்வையிடும் சிறப்பு விருந்தினர்கள்.

**ராசிபுரம், ஆக. 16:** முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியில் மகளிர் சுயஉதவிப் பொருள்கள் விற்பனை சந்தை மற்றும் கண்காட்சி புதன்கிழமை தொடங்கியது.

முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் மாவட்ட மேலாண்மை திட்ட அலகு, நாமக்கல் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் இணைந்து ஆக.16 முதல் ஆக.18 வரை இக்கண்காட்சியியை நடத்துகிறது. இதில் மகளிர் சுயஉதவிக் குழுவினரின் உற்பத்திப் பொருள்கள் இடம் பெற்றுள்ளன.

கண்காட்சியின் தொடக்க விழாவில், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை துறை திட்ட இணை இயக்குநர் ஆர்.மணி பங்கேற்று கண்காட்சியை திறந்து வைத்தார். கல்லூரி செயலர் ஆர்.முத்துவேல்ராமசாமி கண்காட்சியில் முதல் விற்பனையை தொடக்கி வைத்தார்.கல்லூரி முதல்வர் ஆர்.செல்வகுமரன், புல முதன்மையர்கள் ஏ.ஸ்டெல்லாபேபி உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர். இக்கண்காட்சியில் மகளிர் சுயஉதவிக் குழுவினர் உற்பத்தி செய்த உணவுப் பொருள்கள், கலைப் பொருள்கள், பல்வேறு துணி வகைகள், பொம்மைகள் உள்ளிட்டவை இடம் பெற்றன. இதில் 55 அரங்குகள் அமைக்கப்பட்டு, கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியர் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



ராசிபுரம் அருகே உள்ள முத்தாயம்மாள் கல்வி நிறுவனங்களின் தாளாளர் கே.பி.ராமசுவாமி தேசிய கொடி ஏற்றி வைத்த போது எடுத்த படம்.

தினத்தந்தி 17-8-17

### ராசிபுரம் பகுதியில்

# கல்வி நிறுவனங்களில் சுதந்திர தின விழா

ராசிபுரம், ஆக.17–

ராசிபுரம் பகுதியில் உள்ள கல்வி நிறுவனங்களில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது.

## சுதந்திர தின விழா

ராசிபுரம் அருகே உள்ள முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முத்தாயம்மாள் பாலிடெக்னிக் இன்ஸ்டியூசன், முத்தாயம்மாள் கல்வியியல் கல்லூரி சார்பில் சுதந்திர தினவிழா கலைக்கல்லூரி வளாகத்தில் நடந்தது. கல்வி நிறுவனங்களின் தாளாளர் கே.பி.ராமசுவாமி தலைமை தாங்கி தேசிய கொடியை ஏற்றி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள் செல்வக்குமரன், எஸ்.பாலசுப்பிரமணியன், ம.மருதை, புல முதன்மையர்கள் ஸ்டெல்லா பேபி (நிர்வாகம்), எஸ்.பி.விஜயகுமார் (கல்வி), ஏ.பழனிசாமி (தேர்வுகள்), எம்.என்.பெரியசாமி (சேர்க்கை) மற்றும் துறைத் தலைவர்கள், உதவி பேராசிரியர்கள், பணியாளர்கள், மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் கேக் மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

## கஸ்தூரிபா காந்தி கல்வியியல் கல்லூரி

ராசிபுரம் அருகேயுள்ள கஸ்தூரிபா காந்தி கல்வியியல் கல்லூரியில் சுதந்திர தின விழா நடந்தது. கல்லூரியின் முதல்வர் செந்தில் தேசிய கொடியை ஏற்றி வைத்து மாணவிகளுக்கு இனிப்பு வழங்கினார். ராசிபுரம் வித்யாநிகேதன் பள்ளியில் நடந்த சுதந்திர தின விழாவுக்கு பள்ளியின் தலைவர் பாலசுப்பிரமணியம் தேசிய கொடியை ஏற்றி வைத்து விழாவை தொடங்கி வைத்தார். பள்ளி செயலாளர் சுந்தரராஜ் வரவேற்றார். பள்ளியின் துணை செயலாளர்கள் இளையப்பன், ஈஸ்வரமூர்த்தி, பொருளாளர் கணேசன், இயக்குனர்கள் பிரகாஷ், சீனிவாசன், பள்ளிகளின் முதல்வர்கள் மகாலட்சுமி, ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் மாணவ–மாணவிகள் தேசத்தலைவர்களை போல் வேடம் அணிந்து வந்து அனைவரையும் கவர்ந்தனர். பிரி–கே.ஜி. முதல் 11–ம் வகுப்பு வரை பாடம் சார்ந்த மற்றும் அனைத்து பிரிவுகளிலும் முதல் 3 இடங்களை பிடித்த மாணவ–மாணவிகளுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. விழாவில் பெற்றோர்கள், மாணவ–மாணவிகள், ஆசிரியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் வித்யாநிகேதன் இண்டல் பள்ளியின் முதல்வர் ராஜமாணிக்கம் நன்றி கூறினார்.

## பள்ளிகளில் கொண்டாட்டம்

ராசிபுரம் அருகே உள்ள பட்டணம் முனியப்பம்பாளையம் ஸ்ரீ கணபதி விலாஸ் நிதியுதவி பெறும் நடுநிலைப்பள்ளியில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. பள்ளியின் செயலாளர் சுந்தரராஜன் தலைமை தாங்கினார். மாணவ–மாணவிகள் சுதந்திர தின பதாகைகள் ஏந்தியவாறு முக்கிய வீதிகளில் ஊர்வலமாக சென்றனர். கலை நிகழ்ச்சி மற்றும் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் பள்ளியின் நிர்வாக கமிட்டி தலைவர், உறுப்பினர்கள், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ராசிபுரம் அருகே உள்ள ஆர்.புதுப்பாளையம் ஜே.வி.எம். மெட்ரிக் பள்ளியில் சுதந்திர தின விழா நடந்தது. பள்ளியின் தாளாளர் முத்துசாமி தலைமை தாங்கி தேசிய கொடியை ஏற்றி வைத்தார். பள்ளி மாணவர்கள் சுதந்திர தின கோஷங்களை எழுப்பியவாறு ஊர்வலமாக சென்றனர். பள்ளியின் பொருளாளர் சிவமணி, செயலாளர் காத்தமுத்து, பள்ளியின் முதல்வர் ஞானசேகரன் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் பேசினார்கள். நாடகம், நடன நிகழ்ச்சிகள் நடந்தன.

### கோழித்தீவனத்தில்

# பூஞ்சை நச்சு முறிவு மருந்து சேர்க்க வேண்டும்

## ஆராய்ச்சி நிலையம் தகவல்

நாமக்கல், ஆக.17–

நாமக்கல் மாவட்டத்தில் இன்றும் (வியாழக்கிழமை), நாளையும் (வெள்ளிக்கிழமை) நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

அடுத்த 2 நாட்கள் வானம்

குறித்து திருச்செங்கோடு புறநகர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

தினத்தந்தி - 18.08.17

மகாசபை கூட்டம்

பரமத்திவேலூர் தாலுகா



முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரியில்

# மகளிர் சுயஉதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்கள் கண்காட்சி

ராசிபுரம், ஆக.18-

ராசிபுரம் அருகே உள்ள முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரி மற்றும் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, நாமக்கல் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைச்சங்கம் ஆகியவற்றின் சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்கள் விற்பனை கண்காட்சி முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரி வளாகத்தில் கல்லூரிச்சந்தை என்ற பெயரில் நடக்கிறது. இந்த கண்காட்சி நேற்று முன்தினம் தொடங்கியது. இன்று வரை தொடர்ந்து நடக்கிறது. இக்கண்காட்சியை மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனைத் துறையின் திட்ட இணை இயக்குனர் மணி தொடங்கி வைத்தார். கல்லூரி செயலாளர் முத்துவேல் ராமசுவாமி கண்காட்சியின் முதல் விற்பனையைத் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் செல்வக்குமரன், புல முதன்மையர்கள் ஸ்டெல்லா பேபி, விஜியகுமார், எம்.என். பெரியசாமி, சமுதாய பணிகளின் தலைவர் ராமமூர்த்தி, அனைத்து துறைத் தலைவர்கள், உதவிப் பேராசிரியர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இந்த கண்காட்சியில் 55 அரங்குகளில் விற்பனையாளர்கள் தங்களின் பொருட்களை விற்பனை செய்தனர். இதில் நாட்டு நலப்பணித்திட்டத்தினரும், மாணவ-மாணவிகளும் கலந்து கொண்டனர்.

மாநில கால்பந்து போட்டியில்

தினகரன் - 6/9/17

# முத்தாயம்மாள் கல்லூரி சாம்பியன்



வேலூரில் நடந்த மாநில அளவிலான கால்பந்து போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற நாமகிரிப்பேட்டை முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அணியின் மாணவர்கள்.

நாமகிரிப்பேட்டை, செப். 6: வேலூரில் நடந்த மாநில அளவிலான கால்பந்து போட்டியில் பங்கேற்ற நாமகிரிப்பேட்டை முத்தாயம்மாள் கல்லூரி அணியினர், சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளனர்.

மாநில அளவிலான கால்பந்து போட்டி, வேலூரில் நடைபெற்றது. இதில், நாமகிரிப்பேட்டை முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் அணி கலந்துகொண்டது. இறுதிப்போட்டியில் இக்கல்லூரி மாணவர்கள் வெற்றிபெற்று சாம்பியன் பட்டத்தை வென்றனர்.

மாநில அளவிலான கால்பந்து போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்த மாணவர்களை கல்லூரியின் தாளாளர் ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி ஆகியோர் பாராட்டினர். இதில் கல்லூரியின் முதல்வர் செல்வகுமரன், புல முதன்மையர்கள் ஸ்டெல்லா பேபி, விஜயகுமார், பெரியசாமி, பழனிசாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



தினத்தந்தி

ராசிபுரம் 07.09.17.

# முத்தாயம்மாள் கல்லூரி மாணவர்கள் ஆக்கி போட்டியில் சாதனை

ராசிபுரம், செப்.7-

மாநில அளவிலான ஆண்கள் ஆக்கி போட்டி திருவண்ணாமலையில் நடந்தது. இந்த போட்டியில் ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு விளையாடினார்கள். இவர்கள் 3-ம் இடம் பிடித்து சாதனை படைத்தனர். சிறப்பாக விளையாடிய மாணவர்களை கல்லூரியின் தாளாளர் கே.பி.ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, முதல்வர் செல்வகுமரன், புலமுதன்மையர்கள் ஸ்டெல்லாபேபி (நிர்வாகம்), விஜயகுமார் (கல்வி), எம்.என்.பெரியசாமி (மாணவர் சேர்க்கை) பழனிசாமி (தேர்வுகள்) ஆகியோர் பாராட்டி வாழ்த்தினார்கள்.

தினமலர் - 07/9/17

# முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரியில் கல்வி உதவித்தொகை வழங்கல்

ராசிபுரம், செப்.7-

ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பெற்றோரை இழந்த மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பத்து மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

கல்லூரி வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில் சென்னை நன்மை அறக்கட்டளையின் சார்பாக ரூ.54 ஆயிரம் மதிப்புள்ள காசோலையை, அறக் கட்டளை நிர்வாகி சங்கர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் செல்வக்குமரன் மற்றும் கல்லூரி ஆசிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர்.




ராசிபுரம் முத்தாயம்மாள் கலைக்கல்லூரியில் பெற்றோரை இழந்த, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.

மண்டல ஆராதனை, சிறப்பு | கே.பி.ராமலிங்கம், காளிப் | செய்திருந்தனர்.

தினத்தந்தி - 12.09.17



முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரி மாணவர்கள்

# சதுரங்க போட்டியில் சாதனை

ராசிபுரம், செப்.12–
குமாரபாளையம் எஸ்.எஸ்.எம். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பல்கலைக்கழக அளவிலான மாணவ–மாணவிகளுக்கான சதுரங்க போட்டிகள் நடந்தன. இதில் 20 கல்லூரிகள் கலந்து கொண்டன.

இந்த போட்டியில் ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர். இக்கல்லூரியைச் சேர்ந்த மாணவர் சண்முகம் 3–வது இடத்தையும், மாணவி கவிபாரதி 5–வது இடத்தையும், பரமசிவம் 8–வது இடத்தையும், மாணவி சுபலட்சுமி 24–வது இடத்தையும் பெற்றனர். இதில் சண்முகம், கவிபாரதி ஆகியோர் அகில இந்திய அளவிலான சதுரங்க போட்டிகளுக்கு தேர்வு செய்யப்பட்டனர். சிறப்பாக விளையாடி சாதனை படைத்த மாணவ–மாணவிகளை கல்லூரியின் தாளாளர் கே.பி.ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, முதல்வர் செல்வகுமரன், புல முதன்மையர்கள் ஸ்டெல்லாபேபி, விஜயகுமார், பெரியசாமி, பழனிசாமி ஆகியோர் பாராட்டும், வாழ்த்தும் தெரிவித்தனர்.

## முத்தாயம்மாள் கல்லூரியில்

# ஆசிரியர் தினவிழா கொண்டாட்டம்



▶ நாமகிரிப்பேட்டை முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த ஆசிரியர் தினவிழாவில் மாற்றுத்திறனாளிக்கு தொழில் தொடங்க பொருட்கள் வழங்கப்பட்டது.

**நாமகிரிப்பேட்டை, செப்.13:** நாமகிரிப்பேட்டை அருகேயுள்ள முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, முத்தாயம்மாள் பாலிடெக்னிக் சார்பில் ஆசிரியர் தினவிழா கொண்டப்பட்டது. இக்கல்லூரியில் சிறப்பாக செயல்பட்ட பேராசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும், சுயதொழில் தொடங்க பொருட்கள் வழங்கப்பட்டன.

விழாவில் கல்லூரியின் தாளாளர் ராமசுவாமி பேசுகையில், 'வருங்கால சமுதாயத்தின் வேர்களான மாணவர்களை உருவாக்கும் முக்கிய பொறுப்பு ஆசிரியர்களுக்குத்தான் உண்டு. அதை உணர்ந்து ஆசிரியர்கள் செயல்பட வேண்டும்' என்றார்.

இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, கல்லூரி முதல்வர் செல்வகுமரன், பாலிடெக்னிக் பொறியாளர் பாலசுப்ரமணியன், கல்வியியல் கல்லூரியின் முதல்வர் மருதை, புல முதன்மையர்கள் ஸ்டெல்லா பேபி, விஜியகுமார், பெரியசாமி, பழனிசாமி உள்பட 320 பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர். நகரச் செயலர் அன்பழகன நன்றி கூறினார்.

## ஆசிரியர் தினவிழா...

தினமணி - 14.09.17




ராசிபுரம் முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியில் கல்வி நிறுவன தலைவர் கே.பி.ராமசாமி தலைமையில் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் தினவிழாவில், சமுதாயக் கல்லூரி திட்டம் சார்பில், மாற்றுத் திறனாளி ஒருவருக்கு சுய தொழில் செய்வதற்கான உபகரணங்களை வழங்குகிறார் கல்லூரி செயலர் ஆர்.முத்துவேல்.

# பல்கலை கைப்பந்து போட்டி முத்தாயம்மாள் கல்லூரி வெற்றி

**நாமகிரிப்பேட்டை, செப். 28-**

பல்கலை அளவில் நடந்த கைப்பந்து போட்டியில், முத்தாயம்மாள் கல்லூரி சாம்பியன் பட்டம் வென்றது.

சேலம், பெரியார் பல்கலை அளவில் நடந்த கைப்பந்து போட்டி, நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியில் நடந்தது. 10க்கும் மேற்பட்ட அணிகள் கலந்து கொண்டன. இறுதிப் போட்டியில், கொங்கணாபுரம், வித்யா கலை அறிவியல் கல்லூரியை, முத்தாயம்மாள் கல்லூரி அணி, 19க்கு, 18 என்ற கணக்கில் வென்று சாம்பியன் பட்டம் பெற்றது. தொடர்ந்து, ஒன்பதாவது முறை இக்கல்லூரி சாம்பியன் பட்டம் வெல்வது குறிப்பிடத்தக்கது. பரிசளிப்பு விழாவில், கல்லூரி தாளாளர் ராமசாமி, செயலாளர் முத்துவேல் ராமசாமி, பல்கலை உடற்கல்வி இயக்குனர் அங்கமுத்து உள்ளிட்டோர் வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டினர்.



நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் முத்தாயம்மாள் கல்லூரியில், பெரியார் பல்கலை அளவில் நடந்த கைப்பந்து போட்டியில், மோதிய அணிகள்.

பங்கள் என்ற தலைப்பில்

தலைவர் பழனியப்பன்

தினகரன் - 2/10/17

### பல்கலை அளவிலான கைப்பந்து போட்டி

# முத்தாயம்மாள் கல்லூரி மாணவர்கள் சாதனை



நாமகிரிப்பேட்டையில் பல்கலைக்கழக அளவிலான கைப்பந்து போட்டியில் சாதனை படைத்த மாணவர்களுக்கு முத்தாயம்மாள் கல்லூரி தாளாளர் ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி பரிசு வழங்கி பாராட்டினர்.

**நாமகிரிப்பேட்டை, அக்.2:** பல்கலைக்கழக அளவிலான கைப்பந்து போட்டியில், நாமகிரிபேட்டை முத்தாயம்மாள் கல்லூரி மாணவர்கள் சாதனை படைத்தனர்.

நாமகிரிப்பேட்டை அடுத்த முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், பல்கலைக்கழக அளவிலான ஆண்கள் கைப்பந்து போட்டி நடந்தது. பல்வேறு மாவட்டங்களில் இருந்து 10 கல்லூரி அணிகள் பங்கேற்று விளையா

இறுதிப்போட்டியில், கொங்கணாபுரம் வித்யா கல்லூரி அணியை 19-18 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி, முத்தாயம்மாள் கல்லூரி அணியினர் வெற்றிபெற்றனர். இதுவரை கைப்பந்து போட்டியில் 9 முறை இக்கல்லூரி அணியினர் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்றுள்ளனர்.

போட்டிகளில் சிறப்பாக விளையாடிய மாணவர்களுக்கு, கல்லூரி தாளாளர் ராமசுவாமி,

ராமசுவாமி ஆகியோர் பரிசு வழங்கி பாராட்டினர்.

நிகழ்ச்சியில் பெரியார் பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குநர் அங்கமுத்து, செங்கமலை, கல்லூரி முதல்வர் செல்வகுமரன், பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூசன் முதல்வர் பாலசுப்பிரமணியன், புல முதன்மையர்கள் சுந்தரராஜன், ஸ்டெல்லா பேபி, விஜயகுமார், பெரியசாமி, பழனிசாமி உள்ளிட்ட பலர்




மண்டல அளவிலான வலுதூக்கும் போட்டியில் வெற்றி பெற்ற முத்தாயம்மாள் கலைக்கல்லூரி மாணவிகளுடன் தாளாளர் ராமசுவாமி, பெரியார் பல்கலைகழக இயக்குனர் அங்கமுத்து உட்பட பலர்.

# மண்டல அளவிலான வலுதூக்கும் போட்டி
# முத்தாயம்மாள் கலைக்கல்லூரி மாணவிகள் சாதனை

ராசிபுரம், அக்.9-

பெரியார் பல்கலைக் கழக அளவிலான மகளிர் வலுதூக்கும் போட்டி ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவிகள் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை பெற்றனர்.

மேலும் வலுதூக்குதலில் தொடர்ந்து 10-வது ஆண்டாக ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

இப்போட்டியில் மொத்தம் 3 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலம் ஆகிய பதக்கங்களை கல்லூரி மாணவிகள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

கோப்பையை வென்ற மாணவிகளுக்கு கல்லூரி தாளாளர் ராமசுவாமி, செயலாளர் முத்துவேல், பெரியார் பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குநர் அங்கமுத்து, மகளிர் ஒருங்கிணைப்பாளர் இந்திரா, கல்லூரி முதல்வர் செல்வகுமரன் புலமுதன்மையர்கள் டெல்லா பேபி விஜிய குமார், பெரியசாமி, பழனிசாமி, உடற்கல்வி இயக்குனர் ரமேஷ் மற்றும் அசோக் ஆகியோர் பரிசுகளை வழங்கிப் பாராட்டினர்.



என நகராட்சி அலுவலர்கள் தெரிவித்தனர்.

# முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரி செயலாளருக்கு தெற்காசிய விருது




விழாவில் ஆர். முத்துவேல் ராமசுவாமிக்கு சிறந்த ஆங்கில ஊக்குவிப்பாளர் விருதை வழங்குகிறார் சென்னை, பிரிட்டிஷ் உயர்நிலைக் குழுவின் துணை ஆணையர் பரத்ஜோஷி.

**ராசிபுரம், அக். 12:** ராசிபுரம் முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியின் செயலாளருக்கு தெற்காசிய அளவிலான 'ஆங்கில கல்வி ஊக்குவிப்பாளர்' விருது வழங்கப்பட்டுள்ளது.

லண்டன் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழக ஆங்கிலக் கல்வி தரமதிப்பீட்டுக் குழுவின் சார்பில், தெற்காசிய அளவில் மாணவர்களுக்கான சிறந்த ஆங்கிலக்கல்வி ஊக்குவிப்பாளர் விருதுகள் 25 சிறந்த கல்லூரிக்கு வழங்கப்பட்டன.

சென்னை பிரிட்டிஷ் துணை உயர்நிலைக் குழு அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற 'சிறந்த ஊக்குவிப்பு மைய விருது 2016-18 வழங்கும் விழாவில், ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் செயலாளர் முத்துவேல் ராமசுவாமிக்கு விருது வழங்கப்பட்டது.

இவ் விருதை பிரிட்டிஷ் உயர்நிலைக் குழுவின் துணை ஆணையர் பரத்ஜோஷி வழங்கினார். விழாவில் கல்லூரியின் புல முதன்மையர் (கல்வி) எஸ். பி. விஜயகுமார், ஆங்கில மொழிப்புலத் துணை மேலாளர் யு. முகம்மது இக்பால் ஆகியோர் உடனிருந்தனர்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக ஆனந்த்பிள்ளை, டாக்டர். கார்த்திஸ்ரீதர், தமிழக அரசின் உயர்கல்வித்துறை முதன்மை செயலர் சுனில் பாலிவால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினத்தந்தி - 21/10/17



## முத்தாயம்மாள் கலை, அறிவியல்

# கல்லூரி செயலாளருக்கு விருது

ராசிபுரம், அக்.21-

லண்டன் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக்கழக ஆங்கில கல்வி தரமதிப்பீட்டுக் குழுவின் சார்பில் தெற்காசிய அளவில் மாணவர்களுக்கான சிறந்த ஆங்கில கல்வி ஊக்குவிப்பாளர் விருது 25 சிறந்த கல்லூரிகளுக்கு வழங்கப்பட்டன.

இதற்கான விழா சென்னை பிரிட்டிஷ் துணை உயர்நிலைக் குழு அலுவலகத்தில் நடந்தது. இந்த விழாவில் ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் செயலாளர் முத்துவேல் ராமசுவாமிக்கு ஆங்கிலக் கல்வியில் சிறந்த ஊக்குவிப்பு மைய விருது 2016–18–க்கு பிரிட்டிஷ் உயர்நிலைக் குழுவின் துணை ஆணையர் பரத்ஜோஷி வழங்கினார். இந்த விழாவில் கல்லூரியின் புல முதன்மையர் (கல்வி) விஜயகுமார், ஆங்கில மொழிப் புலத்துணை மேலாளர் முகமது இக்பால் ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவில் சிறப்பு விருந்தினர்களாக ஆனந்த்பிள்ளை, டாக்டர் கார்த்தி ஸ்ரீதர், தமிழக அரசின் உயர் கல்வித்துறை முதன்மை செயலாளர் சுனில் பாலிவால் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நிலத்தகராறு:

# வக்கீல் உள்பட 6 பேர் கைது

எருமப்பட்டி,அக்.21–

அளவு மி.மீட்டரில்

போல் அப்பகுதியில் உள்ள

விடுத்து உள்ளனர்.

தினத்தந்தி 23.10.17.




## முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரிக்கு

# பளுதூக்கும் போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம்

ராசிபுரம், அக்.23– சேலம் பெரியார் பல்கலைக் கழக அளவிலான ஆண்கள் பளுதூக்கும் போட்டி ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்தது. இந்த போட்டியில் கலந்து கொண்ட முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் 3 தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலம் ஆகிய பதக்கங்களை பெற்று ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றனர். இக்கல்லூரி பளுதூக்குதலில் தொடர்ந்து 11-வது ஆண்டாக ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. பளுதூக்கும் போட்டியில் கோப்பையை வென்று கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவர்களை கல்லூரியின் தாளாளர் கே.பி.ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, பெரியார் பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குனர் அங்கமுத்து, பல்கலைக்கழக ஒருங்கிணைப்பாளர் செங்கமலை, கல்லூரி முதல்வர் செல்வகுமரன், புல முதன்மையர்கள் ஸ்டெல்லா பேபி (நிர்வாகம்), விஜயகுமார் (கல்வி), பெரியசாமி (மாணவர் சேர்க்கை), பழனிசாமி (தேர்வுகள்) உடற்கல்வி இயக்குனர்கள் ரமேஷ், அசோக் ஆகியோர் பாராட்டினார்கள்.

தினத்தந்தி

## பிச்சை

தாய் அளித்த பிச்சை
என் உயிர்....
தந்தை அளித்த பிச்சை
நான் வாழும் வாழ்க்கை....
நண்பன் அளித்த பிச்சை
வாழ்க்கை அனுபவம்.....
இவர்களுடன் நாடு அளித்த பிச்சை
வேலையில்லா திண்டாட்டம்....!



23-10-17

**பெ.தங்கமணி,** 3-ம் ஆண்டு,
இளங்கலை கணிதவியல்,
முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரி, ராசிபுரம்.

## பொறுமை

ஒரு ஊரில்...

# பல்கலை டேபிள் டென்னிஸ்: முத்தாயம்மாள் கல்லூரி வெற்றி

**நாமகிரிப்பேட்டை, அக். 25-**

பல்கலை அளவிலான டேபிள் டென்னிஸ் போட்டியில், முத்தாயம்மாள் கல்லூரி சாம்பியன் பட்டம் பெற்றது.

சேலம், பெரியார் பல்கலையுடன் இணைவு பெற்ற, கல்லூரிகளுக்கு இடையேயான டேபிள் டென்னிஸ் போட்டி, நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு கே.எஸ்.ஆர்., கல்லூரியில் நடந்தது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில், ராசிபுரம் முத்தாயம்மாள் கலைக் கல்லூரி அணி, கே.எஸ்.ஆர்., கல்லூரியை, 3 –0 என்ற கணக்கில் வென்றது. பெண்களுக்கான இறுதிப் போட்டியில், முத்தாயம்மாள் கல்லூரி, ஓசூர் எம்.ஜி.ஆர்., கலைக் கல்லூரியை, 4 –1 என்ற கணக்கில் வென்றது.




■ சேலம், பெரியார் பல்கலை அளவிலான டேபிள் டென்னிஸ் போட்டியில், வெற்றி பெற்ற, முத்தாயம்மாள் கல்லூரி மாணவ, மாணவியருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

இரண்டு பிரிவுகளிலும், வெற்றி பெற்ற மாணவ, மாணவியரை, கல்லூரி தாளாளர் ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, முதல்வர் செல்வகுமரன் உள்ளிட்டோர் பாராட்டி, பரிசு வழங்கினர்.

# முன்னாள் மாணவர் சங்கம் தொடக்கம்

ராசிபுரம், நவ. 7: ராசிபுரம் முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம் அண்மையில் தொடங்கப்பட்டது.

சென்னையில் நடைபெற்ற தொடக்க விழாவில், கல்லூரியின் தாளாளர் கே.பி.இராமசுவாமி, கல்லூரி முதல்வர் இரா. செல்வகுமரன், புல முதன்மையர்கள் ஆ. ஸ்டெல்லாபேபி (நிர்வாகம்), எஸ்.பி. விஜியகுமார் (கல்வி), எம்.என். பெரியசாமி (மாணவர் சேர்க்கை), ஏ.பழனிசாமி(தேர்வுகள்) ஆகியோர் சங்கத்தைத் தொடக்கி வைத்து பேசினர்.

முன்னாள் மாணவர் சங்க ஒருங்கிணைப்பாளரும், உதவிப் பேராசிரியருமான மு. சதீஷ்குமார், சங்கத் தலைவர் எச். லுக்மேன் சித்திக், உதவி பேராசிரியை எம். ரேவதி உள்ளிட்டோர் பங்கேற்றனர். கூட்டத்தில், சங்கத்தின் நிர்வாகிகளும் தேர்வு செய்யப்பட்டனர்.

பம் காய்ச்சி விற்பனை அவர் தெரிவித்தார்.

தினகரன் — 08-11-17

## முத்தாயம்மாள் கல்லூரி சார்பில்

# போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி




▶ முத்தாயம்மாள் கல்லூரி சார்பில், போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது.

நாமகிரிப்பேட்டை, நவ.8: சர்வதேச போதை பொருள் எதிர்ப்புதினத்தையொட்டி, முத்தாயம்மாள் கல்லூரி சார்பில் போதை தடுப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது.

நாமகிரிப்பேட்டை அருகே முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியியல் கல்லூரி சார்பில், சர்வதேச போதைபொருள் எதிர்ப்பு தினத்தையொட்டி விழிப்புணர்வு பேரணி நடந்தது. ராசிபுரம் பழைய பஸ் ஸ்டாண்டில் தொடங்கிய பேரணி, புதிய பஸ் ஸ்டாண்டில் முடிந்தது. பேரணியை ராசிபுரம் இன்ஸ்பெக்டர் செல்லமுத்து, போக்குவரத்து ஆய்வாளர் சுப்பிரமணி மற்றும் கல்லூரி தாளாளர் ராமசுவாமி, கல்லூரி முதல்வர் செல்வகுமரன் ஆகியோர் கொடியசைத்து தொடங்கி வைத்தனர் பேரணியில், போதை பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி, விழிப்புணர்வு கோஷம் எழுப்பி சென்றனர். இந்நிகழ்ச்சியில் செஞ்சிலுவை சங்கம் மற்றும் ரெட்கிராஸ் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர்கள் செல்வமாலீஸ்வரன், ராமமூர்த்தி, நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் தங்கவேல் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

* Conditions apply, for select models only, models shown are indicative, finance approval ... free gifts delivery 2 to3 weeks

உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமணி — 13.11.17.

# ராசிபுரம் முத்தாயம்மாள் கலை கல்லூரியில் வன உயிரின பாதுகாப்பு விழா

ராசிபுரம், நவ.13-

ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் விலங்கியல் துறை மற்றும் சுற்றுச்சூழல் இயக்கம் சார்பாக வன உயிரின பாதுகாப்பு விழா நடைபெற்றது. அதனையொட்டி மாணவ, மாணவியர்களுக்கு கோலம், கருத்துச்சித்திரம், விழிப்புணர்வு வாசகம் உருவாக்குதல் ஆகிய போட்டிகளும் சிறப்பு பட்டிமன்றமும் நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

விழாவில் செயலர் முத்துவேல் ராமசுவாமி கல்லூரி, முதல்வர் செல்வகுமரன், டீன் ஸ்டெல்லா பேபி (நிர்வாகம்), சமுதாய நலப்பணி தலைவர் ராமமூர்த்தி, விலங்கியல் துறைத் தலைவர் சுரேஷ் குமார், சுற்றுச்சூழல் இயக்க பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# போச்சம்பள்ளி அருகே 21ந்தேதி திலேப்பியா மீன் வளர்ப்பு பயிற்சி

போச்சம்பள்ளி நவ 13

போச்சம்பள்ளி வட்டம் புங்கம்பட்டி கிராமத்தில் வரும் நவம்பர் 21 தேதி தமிழ்நாடு மீன்வளப் பல்கலைகழகத்தின் சார்பில் மீன் வளர்ப்பை அதிகரிக்கும் நோக்குடன் திலேப்பியா மீன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட உள்ளது. கிருஷ்ணகிரி தர்மபுரி மற்றம் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த மீன் பண்ணையாளர்களுக்கு ஒருநாள் பயிற்சி காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் கட்டணம் நபர் ஒன்றுக்கு ரூ 300 ஆகும் விருப்பம் உள்ளவர்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்

காலைக்கதிர் – 15-11-17

# வலு தூக்கும் போட்டி: சேலம் மாணவி புதிய மாநில சாதனை

**சூரமங்கலம், நவ. 15–**

தமிழ்நாடு ஜூனியர் வலுதூக்கும் போட்டியில், சேலம் மாணவி புதிய மாநில சாதனை படைத்துள்ளார்.

தமிழ்நாடு ஜூனியர் வலுதூக்கும் போட்டி கடந்த, 11, 12ல், திருவள்ளூர் மாவட்டத்தில் நடந்தது. சேலம், ஈரோடு, கோவை, நாமக்கல், திருப்பூர், திருநெல்வேலி, சென்னை உள்பட, 26 மாவட்டங்களை சேர்ந்த, 400 வீரர், வீரர்ங்கனைகள் கலந்து கொண்டனர்.



பிரியா

இதில், சேலம் முத்தாயம்மாள் கல்லுாரி மாணவியும், சேலம் மகாத்மா காந்தி உடற்பயிற்சி நிலைய வீராங்கனையுமான பிரியா, 72 கிலோ எடை பிரிவில், ஒட்டுமொத்தமாக, 382.5 கிலோ எடை துாக்கி தங்கப்பதக்கம் வென்றார். மேலும், ஸ்குவாட் பிரிவில், 165 கிலோ எடை துாக்கி முந்தைய சாதனையை முறியடித்து, புதிய மாநில சாதனை படைத்தார். இவர், கோவையில் நடைபெறவுள்ள தேசிய போட்டிக்கு தேர்வு பெற்றுள்ளார்.

இவரை, சேலம் மாவட்ட வலுதுாக்கும் சங்கத் தலைவர் அசோகன், இளங்கோவன், செயலர் பொன்சடையன் ஆகியோர் பாராட்டினர்.

# டெங்கு ஒழிப்பு பணியில் கல்லூரி மாணவர்கள் தீவிரம்

**நாமகிரிப்பேட்டை, நவ. 25–**

காக்காவேரியில், டெங்கு ஒழிப்பு பணியில், தனியார் கல்லூரி மாணவர்கள் ஈடுபட்டனர்.

ராசிபுரம் அடுத்த, காக்காவேரி ஊராட்சியில், மாவட்ட சுகாதார துறையுடன், தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் இணைந்து, டெங்கு காய்ச்சல் ஒழிப்பு மற்றும் விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டனர். வீடுகளில் இருந்த, தண்ணீர் தொட்டிகளில், மருந்து தெளித்தனர். சாக்கடையோரங்களில், கொசு உற்பத்தியாவதை தடுக்க, பிளீச்சிங் பவுடர் கொட்டினர். டெங்கு கொசு எப்படி உற்பத்தியாகிறது, அதை அழிக்கும் முறை, வருமுன் காப்பது குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினர். 40க்கும் மேற்பட்ட நாட்டு நலப் பணித்திட்ட மாணவர்கள் களப்பணியில் ஈடுபட்டனர். முன்னதாக, மாவட்ட சுகாதாரப்பணி துணை இயக்குனர் சொக்கலிங்கம், மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார்.



முத்தாயம்மாள் க

# டெங்கு தடுப்

நாமகிரிப்பேட்டை
நாமகிரிப்பேட்டையி
தாயம்மாள் இன்
சன் மாணவர்கள்
கலை, அறிவியல்
மாணவர்கள் பல

முத்தாயம்மாள் கல்வி நிறுவனம் சார்பில்

# டெங்கு தடுப்பு விழிப்புணர்வு பேரணி



▶ நாமகிரிப்பேட்டையில், முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் டெங்கு தடுப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

**நாமகிரிப்பேட்டை, டிச.7:** நாமகிரிப்பேட்டையில் முத்தாயம்மாள் கல்வி நிறுவனம் சார்பில், டெங்கு தடுப்பு விழிப்புணர்வு பேரணி நடந்தது.

நாமகிரிப்பேட்டையில் முத்தாயம்மாள் கல்வி நிறுவனம் மற்றும் வட்டார சுகாதார துறை சார்பில் டெங்கு தடுப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இந்த பேரணியை நாமகிரிப்பேட்டை வட்டார சுகாதார மருத்துவ அலுவலர் தயாசங்கர் தொடங்கி வைத்தார். அரசு மருத்துவமனையில் தொடங்கிய பேரணி, நாமகிரிப்பேட்டை பஸ் ஸ்டாண்டில் நிறைவடைந்தது. தொடர்ந்து கல்லூரி மாணவர்கள் வீடு வீடாக சென்று, டெங்கு தடுப்பு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினர். மேலும் சிமெண்ட் தொட்டிகள், தண்ணீர் தொட்டி, ஆட்டுக்கல், பிளாஸ்டிக் தட்டுகள் மற்றும் கப்புகள், தேங்காய் சிரட்டை, டயர்கள் உள்ளிட்ட பொருள்களை ஆய்வுசெய்து சுத்தம் செய்தும், பயனற்ற பொருள்களை அகற்றினர்

இதில் முத்தாயம்மாள் கல்லூரியின் சமூக செயல்பாட்டுத் தலைவர் ராமமூர்த்தி, நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் தங்கவேல், பிரபு, வாட்டார சுகாதார மேற்பார்வையாளர் மாதேஸ், சுகாதார ஆய்வாளர் மணிகண்டன், பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் பாலு உள்ளிட்ட பலர் கலந்து கெண்டனர்.

மாலைக்கதிர் – 12.12.2017

# வலுதூக்கும் போட்டியில் இரும்பு மனிதன் பட்டம்

## குமரேசன், பிரியா முதலிடம் பிடித்து சாதனை

சூரமங்கலம், டிச. 12–

மாவட்ட அளவில் நடந்த, வலுதூக்கும் போட்டியில் தாதகாப்பட்டி வீரர், இரும்பு மனிதன் பட்டம் வென்றார்.

சேலம் மாவட்ட அளவில், 35வது வலுதூக்கும் போட்டி சேலம், தாதகாப்பட்டியில் நடந்தது. சேலம் மாவட்ட வலுதூக்கும் சங்க செயலாளர் பொன்சடையன், தலைவர் இளங்கோவன் ஆகியோர் போட்டியை தொடங்கி வைத்தனர்.

சேலம், ஆத்தூர், மல்லூர், ஓமலூர், இடைப்பாடி மற்றும் பல்வேறு பகுதிகளை சேர்ந்த, 200 வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். ஆண்கள் பிரிவில், ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை சேலம், தாதகாப்பட்டி மகாத்மா காந்தி உடற்பயிற்சி நிலைய வீரர்கள் பெற்றனர். இரண்டாமிடத்தை தாதகாப்பட்டி ஸ்போர்ட்ஸ் கிளப் அணி பெற்றது.




■ மாவட்ட வலு தூக்கும் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற, தாதகாப்பட்டி மகாத்மா காந்தி உடற்பயிற்சி நிலைய வீரர்கள்.

தனிப்பிரிவில், மகாத்மா காந்தி உடற்பயிற்சி நிலைய வீரர் குமரேசன், 74 கிலோ எடை பிரிவில் ஒட்டு மொத்தமாக, 537.5 கிலோ எடை தூக்கி இரும்பு மனிதன் பட்டம் வென்றார்.

பெண்கள் பிரிவில், ராசிபுரம் பாவை பொறியியல் கல்லூரி அணி சாம்பியன் பட்டம் பெற்றது. ராசிபுரம் முத்தாயம்மாள் கல்லூரி இரண்டாமிடம் பெற்றது. தனி பிரிவில், தாதகாப்பட்டி மகாத்மா காந்தி உடற்பயிற்சி நிலைய வீராங்கனை பிரியா ஒட்டு மொத்தமாக, 395 கிலோ எடை தூக்கி, இரும்பு பெண்மணி என்ற பட்டம் பெற்றார்.



முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரியில்

# புரிந்துணர்வு ஒப்பந்தம்

தினத்தந்தி

ராசிபுரம், டிச.21-

ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் உணவு மற்றும் விடுதி மேலாண்மை துறை, 3 நட்சத்திர உணவு விடுதியோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதற்கான நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடந்தது. இதில் சிறப்பு விருந்தினராக சேலம் சி.ஜே. பிளாசியோ 3 நட்சத்திர உணவு விடுதியின் பொது மேலாளர் கலாதிநாதன் கலந்து கொண்டார். அப்போது அவர், உணவு மற்றும் விடுதி மேலாண்மையியல் பிரிவை தேர்ந்தெடுத்து படிக்கும் மாணவர்களுக்கான வேலை வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. இந்த கல்லூரியின் மாணவர்களுக்கான வேலை வாய்ப்பு வழங்குவதில் எங்கள் நிறுவனம் முக்கிய பங்காற்றும். தோழமை நிறுவனங்களில் உள்ள பணி வாய்ப்புகளையும் பெற்றுத்தர எங்கள் நிறுவனம் முயற்சிக்கும் என்று கூறினார். நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலாளர் முத்துவேல் ராமசுவாமியும், உணவு விடுதியின் பொது மேலாளர் கலாதிநாதனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதில் கல்லூரியின் முதல்வர் செல்வகுமரன், உணவு மற்றும் விடுதி மேலாண்மையியல் துறைத் தலைவர் மோகன்ராஜ், அத்துறையை சேர்ந்த 150-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நடந்ததாக கிடைத்த

Kalaikathir- 16/1/18

# முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரிக்கு தேசிய நட்சத்திர அந்தஸ்து

ராசிபுரம், ஜன. 16-

மத்திய அரசின், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தைச் சேர்ந்த பயோ டெக்னாலஜி துறை, தேசிய நட்சத்திர அந்தஸ்தை, ராசிபுரம், முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நுண்ணுயிரியல், உயிர் வேதியியல், உயிர்தொழில் நுட்பவியல், வேதியியல், கணினி அறிவியல் ஆகிய துறைகளுக்கு வழங்கியுள்ளது.

பல பல்கலைக்கழகங்கள், அரசு கல்லூரிகள் இந்த திட்டத்திற்கு விண்ணப்பித்திருந்தனர். முதற்கட்ட ஆய்வில் இக்கல்லூரி தேர்ச்சி பெற்றது. பின், டில்லியில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில், ஆய்வுக் கூடம், ஆராய்ச்சி நிலை, கட்டமைப்பு, உபகரணங்கள், மாணவர்களின் சாதனைகள் போன்றவை சமர்ப்பிக்கப்பட்டன.

இதன் வாயிலாக, இக்கல்லூரி, தேசிய நட்சத்திர அந்தஸ்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது. இதற்கான முயற்சியை முன்னெடுத்த, மேம்பட்ட ஆராய்ச்சி மைய துறைத்தலைவர் சுதாகர், முதல்வர் செல்வ குமரன் மற்றும் அனைத்து பேராசிரியர்களை, தாளாளர் ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி உட்பட பலர் பாராட்டினர்.

---

மாநில அளவிலான மாரத்தான் போட்டி

தினகரன் 21.01.18

# முத்தாயம்மாள் கல்லூரி மாணவ, மாணவிகள் சாதனை



▶ மாநில அளவிலான மாரத்தான் போட்டியில், சாதனை படைத்த முத்தாயம்மாள் கல்லூரி மாணவ, மாணவிகள்.

**நாமகிரிபேட்டை, ஜன.21:** மாநில அளவிலான மாரத்தான் போட்டியில், முத்தாயம்மாள் கல்லூரி மாணவ, மாணவிகள் சாதனை படைத்தனர். சேலத்தை அடுத்த கொங்கணாபுரத்தில், இருபாலருக்கான முத்து மாரத்தான் போட்டி நடைபெற்றது. இதில், நாமகிரிப்பேட்டை அடுத்த முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள், மாநில அளவிலான முத்து மாரத்தான் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். இப்போட்டியில் வெற்றி பெற்று பல்வேறு இடங்களை பிடித்த மாணவ, மாணவிகளை கல்லூரி தாளாளர் ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, கல்லூரி முதல்வர் செல்வகுமரன், புல முதன்மையர்கள் ஸ்டெல்லா பேபி, விஜிக்குமார், பெரியசாமி, பழனிசாமி, உடற்கல்வி இயக்குநர் ரமேஷ், அசோக் உள்ளிட்டோர் பாராட்டு தெரிவித்தனர்.

நாமக்கல் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு ஊர்வலம்

**மாவட்டம் முழுவதும்**

தினத்தந்தி 26/1/18

# தேசிய வாக்காளர் விழிப்புணர்வு ஊர்வலம்

நாமக்கல், ஜன.26-

நாமக்கல் மாவட்டம் முழுவதும் தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.



சேந்தமங்கலத்தில் வாக்காளர் தின ஊர்வலத்தை நாமக்கல் தனி தாசில்தார் துரை கொடியசைத்து தொடங்கி வைத்ததை படத்தில் காணலாம்.





ராசிபுரத்தில் தாசில்தார் சாகுல் அமீது தலைமையில் தேசிய வாக்காளர் தின உறுதி மொழி எடுத்துக்கொண்ட போது எடுத்த படம்.

## தேசிய வாக்காளர் தினம்

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு நேற்று நாமக்கல்லில் விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. நாமக்கல் அரசு ஆஸ்பத்திரியில் இருந்து இந்த ஊர்வலத்தை சப்-கலெக்டர் கிராந்திகுமார் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். இந்த ஊர்வலம் மணிக்கூண்டு, போலீஸ் நிலையம் வழியாக நகராட்சி திருமண மண்டபத்தை அடைந்தது.

இதில் 4 கல்லூரிகளை சேர்ந்த சுமார் 500 மாணவ, மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி சென்றனர். தொடர்ந்து நகராட்சி திருமண மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சியில் புதிய வாக்காளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது. மேலும் 100 வயது நிறைவடைந்த வாக்காளர்கள் கவுரவிக்கப்பட்டனர். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிகளில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், தேர்தல் தாசில்தார் சுப்பிரமணியம், நாமக்கல் தாசில்தார் பாலகிருஷ்ணன், தேர்தல் பிரிவு ஒருங்கிணைப்பாளர் ராஜேஸ்கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## சேந்தமங்கலம், ராசிபுரம்

சேந்தமங்கலம் தாலுகா அலுவலகத்தில் நடைபெற்ற ஊர்வலத்தை நாமக்கல் தனி தாசில்தார் துரை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த ஊர்வலம் [illegible] வீதிகள் வழியாக சென்று மீண்டும் தாலுகா அலுவலகத்தை அடைந்தது. இதில் சேந்தமங்கலம் தாசில்தார் பிரகாசம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கடன் சங்க தலைவர் ராஜேந்திரன், மண்டல துணை தாசில்தார்கள் மணிவண்ணன், சக்திவேல், கிராம நிர்வாக அலுவலர் ஆனந்த் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

ராசிபுரம் தாசில்தார் அலுவலகம் சார்பில் வாக்காளர் விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. தாசில்தார் சாகுல் அமீது ஊர்வலத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இதில் சமூக நல தாசில்தார் பாஸ்கரன், ராசிபுரம் நகராட்சி ஆணையாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் அதிகாரிகள், முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சேர்ந்த மாணவ, மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதைத் தொடர்ந்து தேசிய வாக்காளர் தின உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

அதேபோல் ராசிபுரம் திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரியில் தேசிய வாக்காளர் தினத்தையொட்டி மாணவ, மாணவிகள் தேசிய வாக்காளர் தின உறுதி மொழி எடுத்துக்கொண்டனர். இதில் கல்லூரி முதல்வர் மணிமேகலை, குருக்கபுரம் கிராம நிர்வாக அலுவலர் உதயகுமார், வாக்காளர் நிலைய அலுவலர்கள் குருநாதன், சுமதி, ஹேமமாலினி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

---

மாலைக்கதிர் - 02.02.18.

# வலுதூக்கும் போட்டி பஞ்சாப் புறப்பட்ட பெரியார் பல்கலை அணி

**சூரமங்கலம், பிப். 2-**

அகில இந்திய வலுதூக்கும் போட்டியில் பங்கேற்க, பெரியார் பல்கலை மாணவியர் அணியினர், பஞ்சாப் புறப்பட்டனர்.

பஞ்சாப் மாநிலம், மொகாலி, சண்டிகர் பல்கலையில், வரும், 5 முதல், 9 வரை, அகில இந்திய பல்கலைகளுக்குட்பட்ட வலுதூக்கும் போட்டி நடக்கிறது. அதில் பங்கேற்க, சேலம், பெரியார் பல்கலை மாணவியர் அணி சார்பில், நாமக்கல் மாவட்டம், ராசிபுரம், முத்தாயம்மாள் கல்லூரி மாணவியர் பிரியங்கா, இலக்கியா, திருச்செங்கோடு கே.எஸ்.ஆர்., கல்லூரி மாணவி ஆனந்தி ஆகியோர், சேலத்திலிருந்து, ரயில் மூலம், நேற்று, பஞ்சாப் புறப்பட்டனர்.




## முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரியில்

# தேசிய கருத்தரங்கம்


ராசிபுரம், பிப்.1–

ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கனிணி மற்றும் கனிணி பயன்பாட்டியல் துறை சார்பில் தேசிய கருத்தரங்கம் நடந்தது. கல்லூரியின் தாளாளர் கே.பி.ராமசுவாமி வாழ்த்தி பேசினார். கல்லூரியின் முதல்வர் செல்வகுமரன் அறிமுக உரையாற்றினார். சிறப்பு விருந்தினராக கோவை அமிர்தா பல்கலைக்கழகத்தின் கனிணி மற்றும் பொறியியல் துறை இணைப் பேராசிரியர் செந்தில்குமார் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், கல்வி மற்றும் வேலை தொடர்பான அனுபவங்களையும், வலைதளம் மற்றும் தொழில்நுட்பம் அதன் பயன்பாடுகள் மற்றும் சேவைகள் குறித்து பேசினார். தொடர்ந்து கருத்தரங்கு மலர் வெளியிடப்பட்டது.

இந்த கருத்தரங்கில் தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் இருந்து சுமார் 700 பேர் கலந்து கொண்டனர். இதில் 120–க்கும் மேற்பட்டவர்கள் தங்களது ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். கருத்தரங்கில் புலமுதன்மையர்கள் ஸ்டெல்லாபேபி (நிர்வாகம்), பெரியசாமி (மாணவர் சேர்க்கை), பழனிசாமி (தேர்வுகள்), விஜயகுமார் (கல்வி) உள்பட கல்லூரி மாணவர்கள், அனைத்து துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

செல்லீ
(Aut
நன்றி
12 ஆம் ஆண்டில்
எங்களது நிறுவன

# முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேசிய கருத்தரங்கம்




கல்லூரி கருத்தரங்கில், கருத்தரங்கு மலர் வெளியிடும் சிறப்பு விருந்தினர் பேராசிரியர் டி.செந்தில்குமார்.

**ராசிபுரம், பிப்2:** முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கணினி மற்றும் கணினிப் பயன்பாட்டியல் துறை சார்பில் தேசிய அளவிலான கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் தொடக்கவிழாவுக்கு கல்லூரித் தாளாளர். கே.பி.இராமசுவாமி தலைமை வகித்தார். கல்லூரியின் முதல்வர் இரா.செல்வகுமரன் அறிமுகவுரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினராக கோவை அமிர்தா பல்கலைக்கழக கணினி பொறியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர். டி. செந்தில்குமார் பங்கேற்று, வேலை வாய்ப்பு தொடர்பான அனுபவங்களையும், வலைதளம், தொழில்நுட்பம், அதன் பயன்பாடுகள் மற்றும் சேவைகள் குறித்தும் பேசினார். இக் கருத்தரங்கில் தமிழகம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து சுமார், 700 பேர் கலந்து கொண்டனர். இதில் 120–க்கும் மேற்பட்டோர் தங்களது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். இக் கருத்தரங்கில் புல முதன்மையர்கள் ஆ. ஸ்டெல்லா பேபி (நிர்வாகம்), எம்.என்.பெரியசாமி (மாணவர் சேர்க்கை), ஏ.பழனிசாமி (தேர்வுகள்), எஸ்.பி.விஜயகுமார் (கல்வி) ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம் தொடக்கவிழா:** முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம் துவக்க விழா பெங்களூரு ரமீ ஸ்ட்ராண்ட் இன் ஓட்டலில் நடைபெற்றது. இதில் கல்லூரி முன்னாள் மாணவர்கள் மற்றும் கல்லூரியின் முதல்வர் முனைவர் இரா.செல்வகுமரன், புல முதன்மையர்கள் ஆ.ஸ்டெல்லாபேபி, எஸ்.பி.விஜயகுமார், எம்.என்.பெரியசாமி,எ.பழனிசாமி ஆகியோர் குத்துவிளக்கு ஏற்றி விழாவினை தொடங்கி வைத்தனர். விழாவில் முன்னாள் மாணவர் சங்க ஒருங்கிணைப்பாளர் மு.சதீஷ்குமார் வரவேற்றார்.

முன்னாள் மாணவர் சங்க செயல்பாடுகள் குறித்து சங்கத்தின் தலைவர் எச்.லுக்மேன் சித்திக் விளக்கிக் கூறினார். இதில் பங்கேற்ற மாணவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொண்டதோடு, தாங்கள் படித்த கல்லூரியின் வளர்ச்சிக்கான கருத்துகளை எடுத்துக் கூறினர். முன்னாள் மாணவர் சங்க செயல்பாட்டிற்காக மாணவர் தலைவர், துணை தலைவர், செயலர், துணைச் செயலர், உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். முடிவில், முன்னாள் மாணவர் சங்க உறுப்பினர் செ.பூபதி நன்றி கூறினார்.

**கண் பரிசோதனை முகாம்:** இக் கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்கம், செஞ்சுருள் சங்கம், மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை ஆகியன இணைந்து கண் பரிசோதனை மருத்துவ முகாமை கல்லூரி வளாகத்தில் நடத்தின. இதில் சுமார் 500–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர், ஆசிரியரல்லா பணியாளர்கள் பங்கேற்று பரிசோதனை செய்து கொண்டனர்.



ராசிபுரம் முத்தாயம்மாள் கலைக்கல்லூரியின் 25வது ஆண்டையொட்டி மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஹெலிகாப்டர் பயணத்தை சப்-கலெக்டர் கிராந்திகுமார், தாளாளர் ராமசுவாமி,செயலாளர் முத்துவேல் சேலம் கனரா வங்கி துணைப்பொது மேலாளர் கனிமொழி ஆகியோர் கொடியசைத்து துவக்கிவைத்தனர்.

# முத்தாயம்மாள் கலைக்கல்லூரி 25வது ஆண்டுவிழா ஹெலிகாப்டரில் பயணம் செய்த மாணவர்கள்

ராசிபுரம், பிப். 17-

ராசிபுரத்தைஅடுத்துள்ள முத்தாயம்மாள் கலைக்கல்லூரி,பாலிடெக்னிக்இன்ஸ்டிடியூஷன், பொறியியல்கல்லூரி, கல்வியியல்கல்லூரிஆகியவைசார்பாகமுத்தாயம்மாள்கலைக்கல்லூரியின் 25ம் ஆண்டினை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு ஹெலிகாப்டர்பயணம்ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்ச்சியில் சப்-கலெக்டர்கிராந்திகுமார், கல்லூரிதாளாளர்ராமசுவாமி, செயலாளர்முத்துவேல் சேலம் கனரா வங்கி துணை பொது மேலாளர் கனிமொழி ஆகியோர் கலந்துகொண்டுஹெலிகாப்டர் பயணத்தை துவக்கி வைத்தனர். இதற்காக கல்லூரிமைதானத்தில் ஹெலிபேட் அமைக்கப்பட்டு பெங்களூரிலிருந்துஹெலிகாப்டர் வரவழைக்கப்பட்டது.3 நாட்கள் நடைபெறும் இந்த ஹெலிகாப்டர் பயணத்தில் 500க்கும் மேற்பட்டமாணவர்கள் நாமக்கல்மாவட்டத்தை சுற்றி பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பயணிப்பதற்காக கல்வி, விளையாட்டுபோன்றவற்றில் சிறந்துவிளங்கிய,மாணவமாண விகள் 150 க்கும் மேற்பட் டோர் தேர்வு செய்யப் பட்டு இலவச ஹெலிகாப்டர்பயணம் மேற்கொண்டனர்.ஆர்வமுள்ளபிறமாணவர்களுக்காக கல்லூரி நிர்வாகம் சார்பில்அரைமணிநேரம் ஹெலி காப்டர் பயணத்திற்கு ரூ5ஆயிரத்திற்கு பதிலாக சலுகை கட்டணமாகரூ3ஆயிரம்மட்டுமேபெறப்படுகிறது என தெரிவிக்கப்பட்டது.நிகழ்ச்சியில்தாசில்தார் சாகுல் ஹமீது,நாமகிரிப்பேட்டை காவல் ஆய்வாளர் மணிகண்டன், ராசிபுரம் மற்றும் நாமகிரிப் பேட்டை கனரா வங்கியின் தலைமை நிர்வாகிகள் ரவீந்திரன், பாபநாசம், கல்லூரி முதல்வர்கள் செல்வகுமரன்,பாலசுப்பிரமணியன், மருதை, பேராசிரியர்கள்மாணவமாணவிகள்உட்படபலர் கலந்து கொண்டனர்.



# முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரி 25-ம் ஆண்டு விழா

## ஹெலிகாப்டரில் பயணித்த மாணவர்கள்

ராசிபுரம், பிப்.17: முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி 25-ம் ஆண்டு விழாவினைத் தொடர்ந்து கல்லூரி மாணவ, மாணவியர் ஹெலிகாப்டரில் பறந்து விழாவைக் கொண்டாடி மகிழ்ந்தனர். முத்தாயம்மாள் பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூஷன், முத்தாயம்மாள் கல்வியியல் கல்லூரி, முத்தாயம்மாள் பொறியியல் கல்லூரி ஆகியவற்றின் சார்பாக முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 25-வது ஆண்டினைக் கொண்டாடும் வகையில் வானூர்தி பயணம் மேற்கொள்ளப்பட்டது.



மாணவர்களின் ஹெலிகாப்டர் பயணத்தைத் துவக்கி வைக்கும் நாமக்கல் சார்-ஆட்சியர் கிரந்திகுமார் பதி உள்ளிட்ட சிறப்பு விருந்தினர்கள்.

கல்லூரி வளாகத்தில் வெள்ளிக்கிழமை நடந்த இதற்கான துவக்க விழாவில் மாணவர்கள் ஹெலிகாப்டரில் பயணிக்கும் வகையில் நாமக்கல் மாவட்ட சார்-ஆட்சியர் ஸ்ரீகிராந்தி குமார் பதி, முத்தாயம்மாள் கல்வி நிறுவனங்களின் தாளாளர், கே.பி.இராமசுவாமி, செயலாளர், முத்துவேல் இராமசுவாமி, சேலம் கனரா வங்கியின் துணைப் பொது மேலாளர், எஸ்.கனிமொழி ஆகியோர் கொடியசைத்து ஹெலிகாப்டர் பயணத்தைத் துவக்கி வைத்தனர்.

இந்த வானூர்தி பயணத்தில் பங்கு கொண்டு, மாணவ, மாணவியர் மகிழ்ச்சியுடன் பயணித்தனர். இவ் விழாவில் முத்தாயம்மாள் பொறியியல் கல்லூரி இணைச் செயலாளர் ஜி.ராகுல், நாமகிரிப்பேட்டை காவல் ஆய்வாளர் பி.மணிகண்டன், ராசிபுரம் வட்டாட்சியர் எம். சாகுல் அஹமது, ராசிபுரம் கனரா வங்கி மேலாளர் பி.ரவிந்திரன், சீராப்பள்ளி கிளை மேலாளர் பாபநாசம், கல்லூரியின் முதல்வர் இரா. செல்வகுமரன், பாலிடெக்னிக் இன்ஸ்டிடியூஷன் முதல்வர் எஸ். பாலசுப்ரமணியன், கல்வியியல் கல்லூரியின் முதல்வர் ம.மருதை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



ாடு.

நாமக்கல்லில் முதல் முறையாக

# முத்தாயம்மாள் கல்லூரியில் ஹெலிகாப்டர் பயணம்

தினகரன் 19.02-18



ராசிபுரம் முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியின் 25ம் ஆண்டை முன்னிட்டு, ஹெலிகாப்டர் பயணத்தை இன்ஸ்பெக்டர் மணிகண்டன், கல்லூரி தாளாளர் ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசாமி ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

நாமகிரிப்பேட்டை, பிப்.19: நாமகிரிப்பேட்டை அடுத்த காக்காவேரியில் முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியில், 25ஆம் ஆண்டை முன்னிட்டு மாணவர்கள் ஹெலிகாப்டரில் பயணம் செய்ய கல்லூரி நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது.

ஹெலிகாப்டர் பயணத்தை சப்கலெக்டர் கிராந்தி குமார் தொடங்கி வைத்தார். தாளாளர் ராமசுவாமி மற்றும் செயலாளர் முத்துவேல் ராமசுவாமி, சேலம் கனரா வங்கி பொது மேலாளர் கனிமொழி, ராசிபுரம் தாசில்தார் சாகுல், நாமகிரிப்பேட்டை இன்ஸ்பெக்டர் மணிகண்டன் உள்ளிட்டோர் கொடியசைத்து பயணத்தை தொடங்கி வைத்தனர். நாமக்கல் மாவட்டத்தில் முதல் முறையாக கல்லூரி மாணவர்கள் ஹெலிகாப்டர் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இதுகுறித்து சப் கலெக்டர் கிராந்தி குமார் கூறுகையில், ‘கல்லூரி மாணவர்களுக்கு இது புது அனுபவத்தை தரும். மேலும், விமானப்படை, பைலட் ஆக மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும்,’ என்றார். இந்த பயணத்தின் போது காக்காவேரி, நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், ராசிபுரம் உள்ளிட்ட பகுதிகளை ஹெலிகாப்டர் சுற்றி வந்தது.

முத்தாயம்மாள் கல்லூரியில்

தினகரன் - 26.2.18

# 24வது ஆண்டு விழா கொண்டாட்டம்

## மாணவ, மாணவிகள் பங்கேற்பு




முத்தாயம்மாள் கல்லூரியில் 24வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

**நாமகிரிப்பேட்டை, பிப்.26:** முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், 24வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

நாமகிரிப்பேட்டை அடுத்த முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 24வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு கல்லூரியின் தாளாளர் ராமசுவாமி தலைமை வகித்தார். செயலாளர் முத்துவேல் ராமசுவாமி முன்னிலை வகித்தார். விழாவில், கல்லூரி செயலாளர் முத்துவேல் ராமசுவாமி பேசுகையில், 'இந்தியாவிலேயே எந்த கல்லூரியிலும் இதுவரை செய்யாத சிறப்பு நிகழ்வாக வானூர்தி பயணத்தை மாணவர்களுக்காக வழங்கியது இந்த கல்லூரி தான்.

மத்திய அரசின் உயர் தொழில் நுட்பம் மற்றும் அறிவியல் துறை உள்ளிட்ட 9 துறைகள் நட்சத்திர அந்தஸ்தை பெற்றுள்ளது. இந்தாண்டு 7 பேர் தங்கப்பதக்கங்களையும், 42 பேர் பல்கலைக்கழக தர மதிப்பீட்டில் முதல் 10 இடங்களையும் பெற்றுள்ளனர்,' என்றார். இவ்விழாவில், கல்லூரி முதல்வர் செல்வகுமரன், கல்வியில் கல்லூரியின் முதல்வர் மருதை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதனையடுத்து கல்லூரி மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

**News 2018-19**

காலைக்கதிர் – 13-06-18

# ராசிபுரத்தில் ரத்ததான முகாம்

நாமகிரிப்பேட்டை, ஜூன் 13–

ராசிபுரம் அடுத்த, முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், செஞ்சிலுவை சங்கம், செஞ்சுருள் சங்கம், ராசிபுரம் அரசு மருத்துவமனை சார்பில், ரத்த தான முகாம் நடந்தது.

தாளாளர் ராமசுவாமி, டாக்டர் ஸ்ரீதேவி ஆகியோர் முகாமை தொடங்கி வைத்தனர். 100க்கும் மேற்பட்ட மாணவர்கள்; ரத்ததானம் செய்தனர்.

அண்டு ஓட்டல் மேனேஜ் | ளில் வேலைவாய்ப்பு பெறு | தழ்களை வழங்கினர்.



## முத்தாயம்மாள் கலை, அறிவியல் கல்லூரியில்

# ரத்ததான முகாம்

தினத்தந்தி

ராசிபுரம், ஜூன்.14–

ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இளைஞர் செஞ்சிலுவை சங்கம், செஞ்சுருள் சங்கம், ராசிபுரம் அரசு ஆஸ்பத்திரி ரத்த வங்கி, ஓ.சவுதாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் ரத்ததான முகாம் கல்லூரி வளாகத்தில் நடந்தது. முகாமிற்கு கல்லூரியின் தாளாளர் கே.பி.ராமசுவாமி தலைமை தாங்கினார். ராசிபுரம் அரசு ஆஸ்பத்திரி டாக்டர் ஸ்ரீதேவி, ஓ.சவுதாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தின் வட்டார மருத்துவ அலுவலர் கற்பகம், கல்லூரியின் முதல்வர் செல்வகுமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் 80–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள் ரத்ததானம் செய்தனர். நிகழ்ச்சியில் புல முதன்மையர் ஸ்டெல்லா பேபி (நிர்வாகம்), தலைவர் ராமமூர்த்தி (சமூக செயல்பாடு), துறைத் தலைவர்கள், இளைஞர் செஞ்சிலுவை மற்றும் செஞ்சுருள் சங்க ஒருங்கிணைப்பாளர் செல்வமாலீஸ்வரன், உறுப்பினர்கள், அரசு ஆஸ்பத்திரி ஊழியர்கள் கலந்து கொண்டனர். ரத்ததானம் செய்த மாணவ, மாணவிகளுக்கு பழம், ஊட்டச்சத்து உணவுகள், பழரசம் போன்றவை வழங்கப்பட்டன. ரத்ததானம் செய்தவர்களை கல்லூரியின் தாளாளர் கே.பி.ராமசுவாமி, செயலாளர் முத்துவேல் ராமசுவாமி ஆகியோர் பாராட்டினர்.

சாரா தொழிலாளர் பிரி கல் பெருமாள் ஏஜென் கலந்து கொண்டனர்.

தினகரன் - 16/6/18

# முத்தாயம்மாள் கல்லூரியில் ரத்ததான முகாம்




நாமகிரிப்பேட்டை முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடந்த முகாமில் மாணவர்கள் ரத்ததானம் வழங்கினர்.

**நாமகிரிப்பேட்டை, ஜூன் 16:** நாமகிரிப்பேட்டை அருகே உள்ள முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தனியார் தொண்டு நிறுவனம் மற்றும் ராசிபுரம் அரசு மருத்துவமனையின் ரத்த வங்கி, அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் ரத்ததான முகாம் நடைபெற்றது.


இந்த முகாமிற்கு கல்லூரியின் தாளாளார் ராமசுவாமி தலைமை தங்கினார். ராசிபுரம் அரசு பொது மருத்துவமனை மருத்துவர்கள் ஸ்ரீதேவி, கற்பகம் கல்லூரியின் முதல்வர் செல்வகுமாரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் 80க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு ரத்ததானம் வழங்கினர். மேலும் புலமுதன்மையர்கள் ஸ்டெல்லாபேபி, ராமமூர்த்தி, துறைத்தலைவர்கள் செல்வ மவுலிஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர் ரத்ததானம் செய்த மாணவ, மாணவிகளுக்கு பாராட்டி சான்றிதழ் வழங்கப்பட்டது.

அவரது சாவுக்கான காரணம் தெரியவரும் என்று போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தினத்தந்தி - 23.06.18

யோர் முன்னிலை வகித்தனர். விழாவில் தமிழக கவர்னர்



முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியில்

## உலக யோகா தினம்

ராசிபுரம், ஜூன்.23-

ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் யோகா தினத்தை முன்னிட்டு கல்லூரி வளாகத்தில் நாட்டு நலப்பணித் திட்ட மாணவ, மாணவிகள் யோகா பயிற்சியை மேற்கொண்டனர்.

பயிற்சிக்கு கல்லூரி முதல்வர் செல்வகுமரன் தலைமை தாங்கினார். சமூக செயல்பாட்டு தலைவர் ராமமூர்த்தி, நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் சிவகுமரன் மற்றும் திட்ட அலுவலர்கள், மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

கருப்புக்கொடி போராட்டத்தில்

## கைதான தி.மு.க.வினரை சிறையில் அடைக்க உத்தரவு

நாமக்கல், ஜூன்.23-

தமிழக கவர்னர் பன்வாரிலால் புரோகித் ஆய்வு செய்ய எதிர்ப்பு தெரிவித்து நேற்று நாமக்கல்லில் தி.மு.க.வினர் கருப்புக்

வார்கள் என போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(முன்வந்த செய்தி 15-ம் பக்கம்.)

## உள்ளூர் விளையாட்டு



■ ஆந்திராவில் நடந்த தேசிய போட்டியில், வலுதூக்கிய சேலம் வீராங்கனை மீனாட்சி.

காலைக்கதிர் - 26/6/18

# தேசிய வலுதூக்குதல்: சேலம் வீராங்கனைக்கு பதக்கம்

**சேலம், ஜூன் 25-**

தேசிய அளவில் நடந்த வலுதூக்கும் போட்டியில், சேலம், வீராங்கனை வெண்கல பதக்கம் வென்றார்.

ஆந்திரா மாநிலத்தில் ஜூன், 21 – 25 வரை தேசிய அளவில் வலுதூக்கும் போட்டி நடக்கிறது. தமிழகம், ஆந்திரா, கேரளா, கர்நாடகா உள்பட பல்வேறு மாநிலங்களில் இருந்து வீராங்கனைகள் பங்கேற்றனர். தமிழக அணி சார்பில், நாமக்கல், முத்தாயம்மாள் கல்லூரியில், பி.எஸ்சி., இரண்டாமாண்டு படித்து வரும் மீனாட்சி, 17, பங்கேற்றார்.

அவர், 43 கிலோ எடை பிரிவில், வெண்கலப் பதக்கம் வென்றார். வெற்றி பெற்ற அவரை, கல்லூரி நிர்வாகத்தினர், சேலம் மாவட்ட வலுதூக்கும் சங்க செயலாளர் பொன் சடையான் ஆகியோர் பாராட்டினர்.

# தேசிய வலுதூக்கும் போட்டி சேலம் வீராங்கனைக்கு பதக்கம்

சேலம், ஜூன் 26–

சேலத்தை சேர்ந்த வீராங்கனை, தேசிய அளவில் நடந்த, வலு தூக்கும் போட்டியில் பதக்கம் வென்றார்.

ஆந்திரா மாநிலத்தில் ஜூன், 21 முதல் நேற்று வரை, தேசிய அளவில் வலுதூக்கும் போட்டி நடந்தது. இதில் தமிழகம், ஆந்திரா, கேரளா, கர்நாடகா உள்பட பல்வேறு மாநிலங்களில் இருந்து ஏராளமான வீராங்கனைகள் பங்கேற்றனர்.

அந்த வகையில், தமிழக அணியின் சார்பில், நாமக்கல், முத்தாயம்மாள் கல்லூரியில், பி.எஸ்சி., வேதியியல் இரண்டாமாண்டு படிக்கும், பிரியா, 17, கலந்து கொண்டார்.

அவர், 63 கிலோ எடை பிரிவில், வெண்கலம் வென்று சாதனை படைத்தார்.



■ ஆந்திரா மாநிலத்தில் நடந்த, தேசிய வலுதூக்கும் போட்டியில் சேலத்தை சேர்ந்த பிரியா பதக்கம் வென்றார்.

வீராங்கனைக்கு, சேலம் மாவட்ட வலு தூக்கும் சங்கம் சார்பில், பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

நீச்சல் பயிற்சி

தினத்தந்தி - 28.06.18.



பரமத்திவேலூரில் நடந்த போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களை படத்தில் காணலாம்.




நாமகிரிப்பேட்டையில் ஒருவருக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரத்தை போலீஸ் அதிகாரி வழங்கிய போது எடுத்த படம்.

தினத்தந்தி - 28.06.18

மாவட்டத்தில் பல்வேறு இடங்களில்

# போதை பொருள் எதிர்ப்பு தின விழிப்புணர்வு ஊர்வலம்

நாமக்கல், ஜூன்.28-

நாமக்கல் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் சர்வதேச போதை பொருள் எதிர்ப்பு தின விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. இதில் திரளான கல்லூரி மாணவ-மாணவிகள் கலந்து கொண்டு போதை பொருட்களின் தீமை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.



மோகனூரில் கல்லூரி மாணவ-மாணவிகள் போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் சென்ற போது எடுத்த படம்.

## சர்வதேச போதை பொருள் எதிர்ப்பு தினம்

நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்கத்தின் சார்பில் சர்வதேச போதை பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி நாமக்கல் பஸ் நிலையத்தில் நடைபெற்றது. இதற்கு கல்லூரி முதல்வர் (பொறுப்பு) வசந்தாமணி தலைமை தாங்கினார். இதில் மாவட்ட கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு செந்தில், மாவட்ட செஞ்சிலுவை சங்க செயலாளர் ராஜேஷ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு பேசினர்.

போதை பழக்கத்தினால் வரும் நோய்கள் மற்றும் தீமைகள் குறித்து கல்லூரி மாணவ, மாணவிகள் பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வினியோகம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலர் வெஸ்லி செய்து இருந்தார்.

## மோகனூர்

மோகனூர் காவல் துறை, சுப்பிரமணியம் கலை அறிவியல் கல்லூரி சார்பில் மோகனூரில் சர்வதேச போதை எதிர்ப்பு தின விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்துக்கு கல்லூரி தலைவர் பழனியாண்டி தலைமை தாங்கினார். ஊர்வலத்தை மோகனூர் பேர்லீஸ் இன்ஸ்பெக்டர் சுகுமார் தொடங்கி வைத்தார். குமரிபாளையம் முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் ராமலிங்கம், துணைத்தலைவர் நவலடி மற்றும் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

போலீஸ் நிலையம் முன்பு தொடங்கிய ஊர்வலம் கடை வீதி, அரசு மருத்துவமனை, வளையபட்டி சாலை எல்.ஐ.சி அலுவலகம், பஸ் நிலையம் வழியாக மீண்டும் போலீஸ் நிலையம் வந்தடைந்தது. இதில் மோகனூர் போலீசார், சுப்பிரமணியம் கல்லூரி மாணவ-மாணவிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## பரமத்திவேலூர்

பரமத்திவேலூர் கந்தசாமி கண்டர் அறநிலையங்களின் தலைவர் சோமசுந்தரம் போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு ஊர்வலத்தை தொடங்கி வைத்தார். பிரஜா பிதா பிரம்மா குமாரிகள் ஈஸ்வரிய விஷ்வ வித்யாலய வேலூர் கிளை பொறுப்பாளர் அம்பிகா முன்னிலை வகித்தார். போதை மற்றும் குடிப்பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறித்தும், அதனால் ஏற்படும் நோய்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பர பதாகைகளை கையில் ஏந்தியும், கோஷங்கள் எழுப்பியும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

கந்தசாமி கண்டர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி முன்பு தொடங்கிய ஊர்வலம் பரமத்தி வேலூரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று மீண்டும் பள்ளி வளாகத்தை வந்தடைந்தது. ஊர்வலத்தில் பரமத்திவேலூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் லட்சுமணகுமார், தேசிய மாணவர் படை மாணவ,மாணவிகள், பள்ளி மாணவ,மாணவிகள் மற்றும் போலீசார் உள்பட 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## நாமகிரிப்பேட்டை

நாமகிரிப்பேட்டை போலீசார் சார்பில் போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு ஊர்வலம் பஸ் நிலையத்தில் தொடங்கியது. இதில் முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்கள். ஊர்வலத்திற்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் மணிகண்டன் தலைமை தாங்கினார். சப்-இன்ஸ்பெக்டர். செட்டியண்ணன், சிறப்பு சப்-இன்ஸ்பெக்டர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். ஊர்வலம் முக்கிய வீதி வழியாக சென்று மீண்டும் பஸ் நிலையத்தை அடைந்தது. வாகன ஓட்டிகள் குடிபோதையில் வாகனம் ஓட்ட கூடாது. போதை பொருட்களால் ஏற்படும் தீமைகள் குறித்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

## திருச்செங்கோடு

சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை ஒட்டி திருச்செங்கோட்டில் விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. கே.எஸ்.ஆர் பொறியியல் கல்லூரியை சேர்ந்த சுமார் 100-க்கும் மேற்பட்ட தேசிய மாணவர் படையை சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்ட ஊர்வலத்தை தேசிய மாணவர் படை கமாண்டர் அபிசேக் சேத்தி கொடியசைத்து தொடங்கி வைத்தார். திருச்செங்கோடு நகர போலீஸ் இன்ஸ்பெக்டர் பாரதி மோகன் முன்னிலை வகித்தார்.


ஊர்வலத்தில் சென்ற மாணவர்கள் போதைப்பொருள் உபயோகிப்பதால் விளையும் தீமைகளை விளக்கி கோஷங்கள் எழுப்பினார்கள். போதையின் தீமைகள் குறித்து விளக்கும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி சென்றனர். திருச்செங்கோடு புதிய பஸ்நிலையம் அருகில் இருந்து தொடங்கிய ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனை சங்கம் அருகே நிறைவடைந்தது.

தொடர்ந்து தருமபுரி, குமாரசாமிபேட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் மலர்விழி, பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

பக்கம் 260.22 மீட்டரும், ஒகேனக்கல் பக்கம் 315.62 மீட்டர் மற்றும் இரயில்வே பகுதி 58.08 மீட்டர் ஆக மொத்தம் 633.93 மீட்டர்

கால சென்று வர
விரைவில் என்பதால்
இயலும் மற்றும்
வாகனங்கள்
பல்லாயிரக்கணக்கான

உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்




நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், பட்டியல்களை வலைதளத்தில் ஏற்பளிப்பு செய்தல் கருவூலத்தில் ஒப்பளிப்பு செய்த பணிகளுக்கான பயிற்சி குறித் ஆய்வு கூட்டம் கணக்குத்துறை முதன்மை செயலர் மற்றும் ஆணையர் தென்காசி ஜவஹர் தலைமையி நடைபெற்றது.

## புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை மேற்கு ஒன்றியத்தில் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம்!

திணப் பார்வை 18.7.18






அனைத்து பணம் பெறும் அலுவலர்களும் பட்டியல்களை வலைதளத்தில் ஏற்பளிப்பு செய்தல், கருவூலத்தில் ஒப்பளிப்பு செய்தல் பணிப்பதிவேட்டினை வலைதளத்தில் பதிவிடுதல் பணிகளுக்கான பயிற்சி குறித்த ஆய்வு கூட்டம் கணக்குத்துறை, முதன்மை செயலர் மற்றும் ஆணையர் தென்காசி.சு.ஜவஹர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாலைமலர் 18.7.2018



கணக்குத்துறை முதன்மை செயலர் மற்றும் ஆணையர் தென்காசி ஜவகர் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடந்த காட்சி.

# ஆய்வுக் கூட்டம்

நாமக்கல், ஜூலை. 18-

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் சார்நிலைக் கருவூலத்தில் பணம் பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்தின் கீழ் ராசிபுரம் முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிற்சி வழங்கப்பட்டது. கூட்டம் கருவூல கணக்குத்துறை முதன்மை செயலாளர் ஆணையர் தென்காசி ஜவகர் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கணக்குத் துறை முதன்மை செயலர் மற்றும் ஆணையர் தென்காசி ஜவகர் தெரிவித்ததாவது:-

நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள் திறம்பட நடைபெற, மாநில அரசுநிதி மேலாண்மை மற்றும் மாநில அரசு மனிதவள மேலாண்மையை இணைத்து ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. தற்பொழுது நடைமுறையில் உள்ள தன்னியக்க கருவூலப் பட்டியல் ஏற்பளிக்கும் முறை, வலைதள சம்பளப் பட்டியல் மற்றும் மின்னணுவழி ஒப்புதியம் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளன. அனைத்து பணம் பெறும் அலுவலர்களும் பட்டியல்களை வலைதளத்தில் ஏற்பளிப்பு செய்தல், கருவூலத்தில் ஒப்பளிப்பு செய்தல் பணிப்பதிவேட்டினை வலைதளத்தில் பதிவிடுதல் பணிகளுக்கான பயிற்சியினை முறையாக பயின்று தங்கள் பணியினை சரியாக செய்திடுமாறு இங்கு வந்துள்ள அனைத்து அலுவலர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டத்தில் கருவூலம் மற்றும் கணக்குத்துறை மண்டல இணை இயக்குநர், (கோவை மற்றும் திருச்சி மண்டலம்) செல்வசேகர், கருவூல அலுவலர் ரகோத்தமன், நாமக்கல் மற்றும் ராசிபுரம் அனைத்து துறை பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

20.07.18 — தினமலர்



ராசிபுரத்தில் நடைபெற்ற ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்தின் பயிற்சி முகாமில் கருவூல கணக்குத்துறை முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் தென்காசி ஜவஹர் பேசினார்.

# மாநில நிதி மற்றும் மனிதவள மேலாண்மை இணைந்த ஒருங்கிணைப்பு செயல்திட்டம்

## முதன்மை செயலாளர் தகவல்

ராசிபுரம், ஜூலை 20-

ராசிபுரம்சார்நிலைக் கருவூலத்தில் பணம் பெறும்அனைத்து அலுவலர்களுக்கும் ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவளமேலாண்மை திட்டத்தின்(ஐ.எப்.எச்.ஆர்.எம்.எஸ்) கீழ் ராசிபுரத்தில்பயிற்சி அளிக்கப்பட்டது.

அனைத்து பணம் பெறும்அலுவலர்களும் பட்டியல்களை வலைதளத்தில் ஏற்பளிப்பு செய்தல், கருவூலத்தில் ஒப்பளிப்பு செய்தல், பணிப்பதிவேட்டினை வலைதளத்தில் பதிவிடுதல்ஆகியபணிகளுக்கான பயிற்சி குறித்த ஆய்வுகூட்டம்ராசிபுரம் அருகேஉள்ளமுத்தாயம்மாள் கலைக்கல்லூரியில் நடைபெற்றது.

மாநிலகருவூலகணக்குத்துறை முதன்மை செயலாளர் மற்றும் ஆணையர் தென்காசி ஜவஹர் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் கணக்குத்துறை, முதன்மைசெயலர்மற்றும் ஆணையர் தென்காசி ஜவஹர்தெரிவித்ததாவது.

நிதி மேலாண்மை தொடர்பான அரசுப் பணிகள்திறம்படநடைபெற, மாநில அரசுநிதி மேலாண்மை மற்றும் மாநில அரசுமனிதவள மேலாண்மையை இணைத்துஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவளமேலாண்மைதிட்டம்நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

தற்பொழுது நடைமுறையில்உள்ள தன்னியக்க கருவூலப் பட்டியல்ஏற்பளிக்கும் முறை, வலைதளசம்பளப் பட்டியல் மற்றும் மின்னணுவழி ஓய்வூதியம் ஆகியன இத்திட்டத்தில் சேர்க்கப்படவுள்ளன. அனைத்து பணம் பெறும் அலுவலர்களும் பட்டியல்களை வலைதளத்தில் ஏற்பளிப்பு செய்தல், கருவூலத்தில்ஒப்பளிப்பு செய்தல் பணிப்பதிவேட்டினைவலைதளத்தில் பதிவிடுதல் பணிகளுக்கானபயிற்சியினை முறையாகபயின்றுதங்கள்பணியினைசரியாக செய்திட வேண்டும். இவ்வாறு பேசினார்.

இக்கூட்டத்தில்கருவூலம் மற்றும் கணக்குத்துறைமண்டலஇணை இயக்குநர், (கோவை மற்றும் திருச்சி மண்டலம்) செல்வ சேகர், கருவூல அலுவலர் ரகோத்தமன், நாமக்கல் மற்றும்ராசிபுரம்அனைத்துதுறைபணம்பெற்று வழங்கும்அலுவலர்கள் கலந்துகொண்டார்கள்.

காலைக்கதிர் - 03.10.2018.

# பல்கலை மகளிர் வலு, பளு தூக்குதல் முத்தாயம்மாள் கல்லூரி முதலிடம்

**ஓமலூர், அக். 3–**

பல்கலை அளவில், மகளிர் வலு, பளு தூக்கும்போட்டியில் முத்தாயம்மாள் கல்லூரி வெற்றி பெற்றது.

சேலம், பெரியார் பல்கலை சார்பில், கல்லூரிகள் இடையே, மகளிர் வலு, பளு தூக்கும் போட்டி, ராசிபுரம், முத்தாயம்மாள் கல்லூரியில், நேற்று முன்தினம் நடந்தது. அதில், 47, 52, 57, 63, 72 ஆகிய எடை பிரிவுகளில், 96 மாணவியர் பங்கேற்றனர்.



வலுதூக்குதலில், 101 புள்ளிகளை பெற்று, முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரி முதலிடம் பிடித்தது. 97 புள்ளிகளை பெற்ற, முத்தாயம்மாள் மெமோரியல் கல்லூரி, 67 புள்ளிகளை பெற்று, திருச்செங்கோடு கே.எஸ். ஆர்., கல்லூரி அணிகள், அடுத்தடுத்த இடங்களை பிடித்தன.

அதேபோல், பளுதூக்குதலில், அந்த அணிகளே, முதல் மூன்று இடங்களை பிடித்தன. அவர்களுக்கு, கல்லூரி செயலாளர் பிரேம்குமார் பரிசு வழங்கி பாராட்டினார்.